SAMARASAM
சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-30 ஜூன் 2026 ₹25
Volume : 47 Issue : 01
www.samarasam.net

தகர்த்தெறியப்பட்ட
மாணவர்களின் மாபெரும் கனவு

பாலியல் வல்லுறவுகள்
- தீர்வு என்ன?



# கரப்பான் பூச்சி ஜனதா கட்சி

## COCKROACH
## = JANTA PARTY =

சமூக வலைதளக் கணக்கா?
அரசியல் இயக்கமா?
Gen Z புரட்சியா?




IFTஇன் ஹஜ் பெருநாள்
சந்திப்பு நிகழ்ச்சி

aara

# Thyroid & Endocrine Clinic

**One Care Centre for All Thyroid & Breast Disease**

- Thyroid and Endocrine Surgery
- Parathyroid and Adrenal Surgery
- Parathyroid Cancer
- Thyroid Cancer
- Breast Cancer
- Hypothyroidism
- Hyperthyroidism

**For Appointment**

+91 98410 76177 / +91 90940 26174

First Floor

No.251, Hamid Building
Annasalai, Chennai - 600 006

# aara Clinical Laboratories

Advanced Authenticated Report & Assays

**NABL Accredited Medical Laboratory**




## Our Services

- Full Body Checkup Packages
- All Type of Blood Test Available
- All Medical Test Available

For Appointment & Enquiry

**+91 90940 26174 | +91 98417 46177**

Home Collection Available

www.aaraclinicallab.in

No.251, Hamid Building, 3rd Floor, Annasalai, Chennai - 600 006.




## உள்ளே...


● ரியாஸ் மொய்தீன்

**கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (CJP)**

8 சமூக வலைதளக் கணக்கா?
அரசியல் இயக்கமா?
Gen Z புரட்சியா?

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● நாவல் ● புதிர் போட்டி

தகர்த்தெறியப்பட்ட மாணவர்களின் மாபெரும் கனவு | தலையங்கம் | 6

பாலியல் வல்லுறவுகள் – தீர்வு என்ன? | சேயன் இப்ராகிம் | 14

மினுமினுக்கும் திரைக்குப் பின்னால்..! | முகமது கபீர் | 18

ஆனைமங்கலம் செப்பேடு | நெடுஞ்சரமன் ஷேக் அப்துல்லாஹ் | 20

திருக்குர்ஆனைப் புறக்கணித்தல் என்றால் என்ன? | அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது | 24

கல்வியின் பொற்காலம் | சவானா ஆலிமா நாஸிரிய்யா | 29

நபிமொழியின் முக்கியத்துவம் | முஹம்மது பிர்தவ்ஸ் | 32

டிஜிட்டல் உலகம் | கப்ளிசேட் | 34

IFTயின் ஹஜ் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி | S. சாகுல் ஹமீது | 38

ஆரோக்கியமான இளைஞர் சமுதாயத்தை நோக்கி..! | எம்.ஐ.எம். அன்வர் ஸலபி, மதனி | 40

கவிதை : ஆயுள் திருடர்கள்! | டாக்டர் கலீல் | 43

உயிர் காக்க உதவிய ரியல் ஹீரோக்கள் | ரியாஸ் | 50



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## ● தேர்தல் ஆறுதல்

நம் தேர்தல் பற்றி கவிக்கோ அப்துல் ரகுமான் இவ்வாறு கூறுவார்.

புறத்திணை சுயம்வர மண்டபத்தில் போலி நளன்களின் கூட்டம். கையில் மாலையுடன் குருட்டுத் தமயந்தி.

எத்தனை அறிஞர்களை உருவாக்கிய பள்ளிக்கூடம் ஒரு நல்லவரைக் கூட உருவாக்கவில்லையே? ஒரே ஒரு ஆறுதல். பாஜகவை காலுன்றச் செய்யாமல் விட்டது தான்.

– M. ராதாகிருஷ்ணன், வாணியம்பாடி

## ● ஜீரணிக்க முடியாத தீர்ப்பு

திமுக கூட்டணியில் ஒருங்கிணைப்பு இல்லாமல் போனது வாய்ப்புக்கேடு. ராகுல் காந்தியும் வழக்கம் போல் ஸ்டாலின் கையைப் பிடித்து, இணைந்து பரப்புரை செய்யாதது தமிழக வாக்காளர்களின் மனங்களை வெகுவாக மாற்றி விட்டதால் மாற்றத்தை நோக்கி நகர்ந்து விட்டனர். இந்தியாவே திரும்பிப் பார்க்க வைத்த திட்டங்களே தேர்தலில் பேசும் என திமுகவினர் நம்பி ஏமாந்துள்ளனர். உளவுத்துறை சரியாகக் கணித்து தேர்தல் களத்தின் சூழலைத் தெரிவிக்கத் தவறி விட்டது. தலைநகரைச் சுற்றியுள்ள நான்கு மாவட்டங்களிலும் திமுக கோட்டையில் ஓட்டை விழுந்ததை நம்பவே முடியவில்லை. அச்சூழலில்தான் முதல்வரும் தோற்றுவிட்டார். கொளத்தூர் வாசிகளின் தீர்ப்பு ஜீரணிக்க முடியாதது.

புனித ஹஜ் குறித்து எளிய நடையில் அனைவருக்கும் எளிதில் புரியும் வண்ணம் கட்டுரை அமைந்திருந்தது. இப்ராஹீம் (அலை) அவர்களின் அழகிய நடைமுறையையும் அணுகுமுறையையும் அழகிய உரையாடல்களுடன் வாசிக்கச் சிறப்பாக அமைந்திருந்தது.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## ● பயனுள்ள கட்டுரை




தமிழ்நாடு தேர்தல் முடிவுகள் திமுக கூட்டணிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மக்களுக்குமே அதிர்ச்சியானது. பாஜகவை தவெக எப்படி எதிர்கொள்ளப்போகிறது என்பது சவாலானது. சமரசம் தலையங்கம் சிறப்பான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. இப்ராஹீம் நபியின் தியாகங்களைப் படிப்பினையுடன் கூறிய ஹஜ் குறித்த கட்டுரை நாங்களும் புரிந்து கொள்ளும்படி இருந்தது. திருக்குர்ஆன் விரிவுரை, கடைசிப் பக்கம் அருமை.

– ப.குருசாமி, தேனி

## ● பெண்கள் பாதுகாப்பு அவசியம்

தலையங்கம் மிகச் சிறப்பு. தேர்தல் முடிவுகளை மிகச் சரியாக எடை போட்டு தெளிவான அறிவுரைகள் அல்ல, அறவுரைகள் வழங்கியுள்ளீர்கள். ஊழலற்ற ஆட்சி, போதையற்ற ஆட்சியைக் கொண்டு வரும் திறன், தைரியம் விஜய்க்கு இருக்கிறதா என்பது போகப் போகத்தான் தெரியும். பெண்களின் பாதுகாப்பு குறித்தும் தலையங்கத்தில் வலியுறுத்தி இருக்க வேண்டும்.

முஸ்லிம் பெண்களின் கல்வி இடைநிற்றல் குறித்த ஆய்வுகள் தேவையானதும், பல விஷயங்கள் கவனத்துக்கு வந்ததும் அவசியமே. அதே சமயத்தில் காலத்தின் சூழ்நிலை, பெண்களின் பாதுகாப்பு குறித்த சிந்தனைகள் முஸ்லிம் சமுதாயத்தில் பரவலாகக் காணப்படுவதும் மறுப்பதற்கில்லை. கற்றது வரை போதும், நல்ல மணமகன் வசம் பெண்ணை ஒப்படைத்து விட்டால் நம் பாடு நிம்மதி என்று கருதும் பெற்றோர்களே அதிகம்.

– S.A. சபீர் அஹ்மது,
ஆணைக்காரன் சத்திரம்

● **துல்லியமான ஆய்வு**

தேர்தல் முடிவுகள் தெரிவிக்கும் செய்திகளை தலையங்கம் ஆதங்கத்தோடு வெளிப் படுத்தி உள்ளது. நாயக முகம் நாட்டை நாசப் படுத்தாமல் இருந்தால் சரி. பாஜக குறுக்கு வழியில் தமிழ்நாட்டைச் சூறையாடத் துடிக் கின்றது. ஹஜ் கட்டுரை அருமை, ஹஜ் பற்றிய விஷயங்களை எத்தனை முறை படித்தாலும் உள்ளம் உவகை கொள்ளும்.

'ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் ஓர் அலசல்' தெளிவான விளக்கங்களைத் தந்தது. தமிழ்நாடு என்ன ஆகுமோ என்ற அச்சத்தைத் தாண்டி அறிவுசார் விஷயங்களைக் காண்பது அரிதாகிவிடும் என்ற அவலநிலையே காணப்படும் சூழ்நிலை உள்ளது. நஸ்ரத் ரோஸி மொழிப் பாடங்களின் வாய்ப்புகளை இளைஞர்களுக்கு உணர்த்திய விதம் நன்று. தமிழகத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி இடைநிற்றல் குறித்த ஷா.காதர் கனியின் ஆய்வு துல்லியமானது, நிகழ்வுகளை நிதர்ச னமாக அறிய வைத்த விதம் நன்று. விலக் கலுக்கான அடிப்படைக் காரணங்கள் அனைத் தும் 100% உண்மை.

– ஐ. சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

● **அழகிய மொழிபெயர்ப்பு**

'ஹஜ் சடங்குகளின் அர்த்தங்களும், ஆன்மிக அனுபவங்களும்' கட்டுரை மலை யாளத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்பட் டாலும் அழகான தமிழ்ச் சொற்களுடனும், இலக்கிய நயத்துடனும் இஸ்மாயீல் இம்தாதி மொழிபெயர்த்த விதம் அருமை. மினா, அரஃபா, முஸ்தலிஃபா போன்ற சிறப்புமிக்க இடங்களின் நோக்கம் உணர்ந்து ஹாஜிகள் சென்றால் மிகச் சிறப்பாக இருக்கும். 16-31 மே இதழ் பாதுக்காக்க வேண்டிய இதழ்.

-ஜே. மஃரூப், குலசேகரன்பட்டினம்

● **சரியான அறிவுறுத்தல்**

கொள்கை எதிரியான பாஜகவை எதிர்த்து விஜய் களம் காணவேண்டும் என்ற தலையங்க அறிவுறுத்தல் மிகச் சரியானது. திமுக அரசு சிறப்பான சமூக நலத் திட்டங்களை முன்னெடுத்த போதும் வெற்றி வாய்ப்பை இழந்திருப்பது வருத்தத்திற்குரியது. பதவிக்காக எதையும் செய்வார்கள் என்பதை காலம் உணர்த்துகிறது. கல்வி சவால் நிறைந்தது. விதைப்பதெல்லாம் முளைக்க வேண்டுமென் றால் விதைகளின் தரம் முக்கியம்.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

● **புதிய பார்வை**

தேர்தல் முடிவுகள் குழந்தைகளின் விருப்பத்திற்கேற்ப அமைந்திருப்பது வேடிக்கை. தவெக கொள்கை எதிரியிடம் கவனமாக இருக்க வேண்டும். ஹஜ் குறித்த கட்டுரை புதிய அனுபவத்தைத் தந்தது. புதிய பார்வையைத் தந்த நகாஸ் மாலாவுக்கு நன்றி. ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகளும் நமக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. மம்தா, ஸ்டாலி னின் தோல்வி எதிர்பாராத ஒன்று.

– S. மகுதனன், M. லைலாம்மா,
M. அஜித்தா, தேனி


## பெண் வார்டன் தேவை

சென்னையில் உள்ள ஒரு மகளிர் கல்லூரிக்கு, கல்வி நிறுவனத்தில் வார்டனாகப் பணியாற்றிய அனுபவம் உள்ள முஸ்லிம் பெண் வார்டன் தேவை.

இலவச உணவு, தங்கும் இடம்.

சமீபத்திய சுயவிவரத்துடன் (CV) 7 நாள்களுக்குள் விண்ணப் பிக்கவும்:

faaizzee@gmail.com
அலைப்பேசி எண் : 9566294719

சரம் : 47
மலர் : 01

وَقُولُوا۟ قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 துல்ஹஜ் 29 - 1448 முஹர்ரம் 14 ● 2026 ஜூன் 16-30

# தகர்த்தெறியப்பட்ட மாணவர்களின் மாபெரும் கனவு

2026 மே 3ஆம் தேதி நடைபெற்ற நீட் (இளநிலை) 2026 நுழைவுத் தேர்வை, வினாத்தாள் கசிவு புகார்களைத் தொடர்ந்து தேசியத் தேர்வு முகமை(NTA) ரத்து செய்துள்ளது. மருத்துவப் படிப்பிற்காக நடத்தப்பட்ட இந்தத் தேர்வில் சுமார் 22 இலட்சம் மாணவர்கள் பங்கேற்றனர். அவர்கள் அனைவரும் இப்போது மீண்டும் தேர்வு எழுத வேண்டும். மாபெரும் மாணவர் கனவு இதன் மூலம் தகர்த்தெறியப்பட்டுள்ளது. மன அழுத்தம், பொருளாதார நெருக்கடிக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இது முதல் முறையல்ல. ஒவ்வொரு முறையும் நீட் தேர்வில் குளறுபடிகள் ஏற்படுவதும் வினாத்தாள் மாஃபியாக்கள் தப்பிவிடுவதும் வாடிக்கையாகி விட்டது. நீட் தேர்வு மோசடியால் தகுதியற்றவர்கள் வெல்வதும் தகுதியானவர்கள் தோற்கடிக்கப்படுவதும் தொடர்கிறது. அதுபோல UGC - NET, CUET, SSC, JEE போன்ற தேர்வுகளிலும் வினாத்தாள் கசிவு ஏற்பட்டுள்ளன.

‘வினாத்தாளின் 320 கேள்விகளில் 120 கேள்விகள் கசிந்துள்ளதாகக் கூறப்படுகிறது. கேரளா அல்லது சீக்கர் (ராஜஸ்தான்) என எங்கிருந்தாலும் குற்றம் செய்தவர்கள் தப்பிக்க முடியாது. இந்த விவகாரத்தை அரசு மறைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. ஆனால் உடனடியாகத் தேர்வை ரத்து செய்துவிட்டு CBI விசாரணை தொடங்கப்பட்டுள்ளது’ என்று நீட் தேர்வு குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டுள்ளார் ராஜஸ்தான் அமைச்சர் கிரோடி லால் மீனா. மகாராஷ்டிராவைச் சேர்ந்த விரிவுரையாளரும், லாத்தூரைப் பூர்வீகமாகக் கொண்ட வருமான பி.வி.குல்கர்னி NEET UG 2026 வினாத்தாள் கசிவில் முக்கிய நபராகக் கருதப் படுகிறார்.

இது ஒருபுறமென்றால் CBSE விடைத்தாள் திருத்தலில் நிகழ்ந்த மோசடி 17 இலட்சம் மாணவர்களின் எதிர்காலத்தைச் சூறையாடியுள்ளது. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) இந்த ஆண்டு 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்துவதற்காகப் புதிய மின்னணு மதிப்பீட்டு முறையான திரைவழி மதிப்பீட்டு முறையை(OSM – On Screen Marking) அறிமுகப்படுத்தியது. இந்த ஆண்டு அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட விடைத் தாள்களில் 13,000 தாள்கள் வாசிக்க இயலாத அளவிற்கு இருந்ததாகவும் அதனால் கைகளால் திருத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் பல மாணவர்கள் மிகக் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றதும் அதிக அளவில் தேர்ச்சி விகிதம் குறைந்ததும் மாணவர் களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

OSM - On Screen Marking ஒரு பாதுகாப்பான டிஜிட்டல் தளத்தில் பதிவேற்றப்பட்டு ஆசிரியர்களால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. மதிப்பெண்கள் தானாகவே அட்டவணைப் படுத்தப்பட்டு விடும் என்பதால் கூட்டல் பிழைகள் தவிர்க்கப்படுகின்றன. உலகில் எந்த இடத்தில் இருந்தும் எந்தவொரு CBSE பள்ளி ஆசிரியரும் இணையதளத்தின் மூலம் மதிப்பீடு செய்யலாம். வெளிப்படைத்தன்மை கொண்டது இது. மாணவர்கள் தங்கள் சொந்த விடைத் தாள்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களை எளிதாக அணுகலாம் என இந்த டிஜிட்டல் மதிப்பீடு முறையை வர்ணித்தது பெருமை பாராட்டியது பாஜக அரசு. ஆனால் இதில் நடந்த குளறுபடி ஒட்டுமொத்த மாணவர்களின் எதிர்காலத்தையும் சிதைத்து விட்டது.

பல விடைத்தாள்கள் மங்கலாகவோ, வெறுமையாகவோ அல்லது மாற்றப்பட்டோ இருந்த தாக மாணவர்கள் குற்றம் சாட்டினர். CBSE 12ஆம் வகுப்பு மாணவரான வேதாந்த் ஸ்ரீவஸ்தவா இயற்பியல் விடைத்தாள் மறுமதிப்பீட்டு செயல்முறையின் ஒரு பகுதியாகப் பதிவிறக்கம் செய்த போது விடைத்தாள் நகல் தன்னுடையது அல்ல என்றும், அது வேறு ஒருவருடையது என்றும் சமூக வலைதளத்தில் பதிவிட பல மாணவர்களும் இதுபோன்று தங்களுடைய விடைத் தாள்களும் மாறியுள்ளதாகப் பதிவிட பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சுமார் 30 விடைத்தாள்களை மீண்டும் ஸ்கேன் செய்யாமல் நிராகரித்ததாக CBSE ஒப்புக்கொண்டது. 4 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தங்களின் மதிப்பெண்கள் குறித்து ஐயம் எழுப்பி விண்ணப்பித்திருக்கின்றனர்.

மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடிய பெரும் குற்றத்தை ஒப்புக்கொண்டு சீர் செய்ய வேண்டிய ஒன்றிய அரசு விவகாரத்தை திசை திருப்பவே முயன்றது. ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ தொலைக்காட்சி நிறுவனமான தூர்தர்ஷன் தொகுப்பாளர், வேதாந்த் ஸ்ரீவஸ்த வாவை ‘பாகிஸ்தானி’ என்று குறிப்பிட்டு திசை திருப்ப முயற்சித்தார்.

ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியைச் சேர்ந்த 18 வயது சர்தக் சித்தாந்த் தனது கோடிங், ஆராய்ச்சித் திறன்களைப் பயன்படுத்தி OSM முறையில் ஏற்பட்ட குளறுபடிகளைக் கண்டறிந்து சமூக வலைதளத்தில் வெளியிட்டார். இது குறித்து 31 எம்பிக்கள் முன்னிலையில் பேசிய அவர் டெண்டர் நடைமுறைகளில் முறைகேடுகள் நடந்துள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

இரண்டு முறை டெண்டரை ரத்து செய்துவிட்டு 2025 ஆகஸ்டில் Coempt Edu Teck நிறுவனத்திற்கு டெண்டர் கொடுக்கப்பட்டது. இந்நிறுவனம் இதற்கு முன்பு குளோபரினா டெக்னாலஜிஸ் என்ற பெயரில் இயங்கியபோது 2019இல் தெலுங்கானா மாநிலத் தேர்வு முடிவுகளில் நடந்த பெரும் குளறுபடிகளிலும் சர்ச்சையிலும் சிக்கிய நிறுவனமாகும். இதுபோல் 2023ஆம் ஆண்டிலும் இதுபோன்ற குளறுபடி நடந்து 23 மாணவர்களின் தற்கொலைகளுக்கு வழிவகுத்தது. கருப்புப் பட்டியலிலுள்ள Coempt Edu Teck நிறுவனத்திற்குச் சாதகமாக டெண்டர் விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. பிளாக் லிஸ்ட்(Blacklist) விதிகளும், மென் பொருள் விதிகளும் மாற்றப்பட்டன.

தன்னை எத்திகல் ஹேக்கர் என்று விவரிக்கும் நிசர்க் அதிகாரி என்ற மாணவர், OSM இணைய முகவரிக்குள் எளிமையாக நுழைய முடிவதன் மூலம், யார் வேண்டுமானாலும் தேர்வு விடைத்தாள்களில் எளிதாக முறைகேடு செய்யலாம், மதிப்பெண்களை மாற்றலாம், தொலைப்பேசி எண்கள் வங்கி விவரங்களைக் கூடப் பெறலாம் என்று பல அதிர்ச்சித் தகவல் களை வெளியிட்டுள்ளார்.

நாடு முழுவதும் பெரும் அதிர்வை ஏற்படுத்திய இந்த முறைகேடுகளுக்காக கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி ஜந்தர் மந்தரில் காக்ரோச் ஜனதா கட்சி (CJP) வரலாறு காணாத போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டிய நேரம் இது. CBSE தேர்வுத்தாள் திருத்தும் குழு டிஜிட்டல் முறையின் தோல்வி யைக் கவனத்தில் கொள்வதுடன் இந்தக் குளறுபடியில் ஈடுபட்டவர்களை முறையான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். வினாத்தாள் கசிவில் ஈடுபட்டவர்கள், அதற்குத் துணை புரிந்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

இலட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிய ஒன்றிய அரசின் செயலைச் சாதாரணமாகக் கடந்து விட முடியாது. மாணவர்களின் வாழ்வில் விளை யாடியவர்களுக்கான தண்டனை என்ன? கடும் உழைப்பைச் செலுத்தி பெரும் கனவுகளுடன் கல்வி பயின்ற மாணவர்களுக்கு ஒன்றிய அரசு என்ன பதில் சொல்லப் போகிறது?

● ரியாஸ் மொய்தீன்

# கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (CJP)

## சமூக வலைதளக் கணக்கா?
## அரசியல் இயக்கமா?
## Gen Z புரட்சியா?

**உலகத்திலேயே அதிக இளைஞர்களைக் கொண்ட நாடாகவும் மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும் இந்தியா திகழ்கிறது. அதேபோல் இந்திய ஒன்றியம் பாஜக ஆட்சியின் கீழ் தொடர்ச்சியாகவே வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சந்தித்து வருகிறது.**

**இந்நிலையில் 2026 மே 15 அன்று தலைமை நீதிபதி சூர்யகாந்த்(Surya Kant) வேலையில்லா இளைஞர்களை கரப்பான் பூச்சி(cockroach), அழுகும் மரத்திலிருந்து ஊர்ந்து வந்து அமைப்பைத் தாக்கும் ஒட்டுண்ணிகள் எனக் கூறினார். இது மிகப்பெரும் சர்ச்சையான நிலையில் அபிஜித் திப்கே என்ற இளைஞர் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி(Cockroach Janata Party - CJP) என்று சமூக வலைதளப் பக்கத்தைத் தொடங்க இளைஞர்கள் மத்தியில் தீயாய்ச் செய்தி பரவி இலட்சக்கணக்கான இளைஞர்கள் இந்தப் பக்கத்தில் இணையத் தொடங்கினர். தொடர்ந்து மீம்ஸ்கள், AI பாடல்கள், ரீல்ஸ்கள் என இணையத்தை கரப்பான் பூச்சி ஜனதா கட்சி ஆக்கிரமித்தது.**

### இளைஞர்களின் அதிருப்தியே CJP



நீதிபதி சூர்யகாந்த்



அபிஜித் திப்கே

இந்திய ஒன்றியத்தை 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஆளும் பாஜக 2014 மக்களவைத் தேர்தலில் பல திட்டங்களை அறிவித்தது. அதன் மைய முழக்கமாக 'நல்ல நாள்கள் வருகிறது. அச்சே தின்(Achhe Din)' என்பதே இருந்தது. குறிப்பாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, சிறு குறு தொழில் மேம் பாடு, முறைகேடற்ற நிர்வாகம் எனப் பல திட்டங்களை முன்வைத்தனர். முன்பு இருந்த அரசாங்கங்களின் மீது இருந்த அதிருப்தியாலும் பாஜக கொடுத்த வாக்குறுதிகள் மீது இருந்த நம்பிக்கையாலுமே மக்கள், குறிப்பாக இளைஞர்கள் பாஜகவை மூன்று தேர்தல்களாகத் தேர்ந்தெடுத்தனர்.

இந்தியாவில் உள்ள 1.4 பில்லியன் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். அதில் அரசியலில் ஈடுபடு பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அண்மையில் மேற் கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு 29% இந்திய இளைஞர்கள் எந்த ஓர் அரசியல் ஈடுபாடுமின்றி இருப்பதாகவும், வெறும் 11% இளைஞர்களே அரசியல் கட்சியில் உறுப் பினர்களாக இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

இந்திய அரசியலின் போக்கை நிர்ணயிக்கக் கூடிய சக்திகளாக இளைஞர் களே இருக்கின்றனர். அதனால்தான் அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகளும் இளைஞர்களின் பிரச்னைகளை மையப்படுத்தியே அமைகிறது.

இந்தியாவின் GDP அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகிறது. 2014 தேர்தலில் பாஜக முக்கிய வாக்குறுதியாக ஆண்டுதோறும்

இரண்டு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும் எனக் கூறியது. ஆனால் அது போதிய அளவில் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கமும் அது குறித்த தெளிவான தரவுகளை வெளியிடுவதும் இல்லை.

ராய்ட்டர்ஸ் அறிக்கையின்படி 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இந்தியர்களிடையே வேலையின்மை விகிதம் சுமார் 9.9% ஆக உள்ளது. அதேவேளையில் பணவீக்கம், வேலை வாய்ப்புகள் குறித்த இளைஞர்களின் கவலைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இதில் படித்த பட்டதாரி இளைஞர்களே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். தனியார் துறைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில்தான் பிரச்னை உள்ளது எனப் பார்த்தால் பல்வேறு அரசுத் துறைகளில் கிட்டத்தட்ட பத்து இலட்சம் பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும், அவற்றில் அதிகபட்சமாக 2,90,000 பணியிடங்கள் ரயில்வே துறையில் மட்டுமே இருப்பதாகவும் கூறப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தால் சில ஆயிரம் அரசு வேலைகளுக்குப் பல இலட்சம் நபர்கள் விண்ணப்பிக்கும் சூழலும் இருக்கிறது.




உலகிலேயே அதிகப்படியான செயலில் உள்ள இராணுவ வீரர்களைக் கொண்ட நாடாக இந்தியா இரண்டாம் இடத்தில் இருக்கிறது. சிறு வயதிலிருந்து இராணுவக் கனவுகளுடன் இளைஞர்கள் தயாராவதுண்டு. அந்தக் கனவில் மண்ணை வாரிப் போடும் வகையில் அக்னிபாத் எனும் திட்டத்தை பாஜக அரசு அறிவித்தது. இது இளைஞர்கள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தி இந்தியா முழுவதும் போராட்டம் வெடிக்கக் காரணமாக அமைந்தது.

வேலைவாய்ப்பை அதிகரிக்க 21ஆம் நூற்றாண்டின் வேலைச் சந்தைக்குத் தேவையான திறன்களைப் பெறுவதற்கு 'உதவும் திறன் இந்தியா' போன்ற முதன்மைத் திட்டங்களைப் பற்றியும் மோடி அரசு பறைசாற்றி வருகிறது. இருப்பினும் தேசிய ஜனநாயகக் கூட்டணி(NDA) ஆட்சிக்கு வந்ததிலிருந்து கல்விக்கான செலவினம் சீராகக் குறைந்து வருகிறது.

2026ஆம் ஆண்டு கணக்கின் படி ஒன்றிய அரசாங்கம் மொத்த GDPஇல் கல்விக்காக 0.6 விழுக்காடும் மாநிலங்களுடன் சேர்த்து 4.12 விழுக்காடும் செலவு செய்கிறது. இது NEP 2024 பரிந்துரையின்படியும் 2014இல் பாஜக வாக்குறுதி அளித்த 6 விழுக்காட்டிலிருந்தும் மிகவும் குறைவு. இது மட்டுமின்றி தொடர்ச்சியாகவே போட்டித் தேர்வுகள் நடைபெறுவதில் முறைகேடு, வினாத்தாள் கசிவு ஆகிய முறைகேடுகள் போட்டித் தேர்வுகளுக்காகக் கடுமையாக உழைக்கும் இளைஞர்களுக்கு மன உளைச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

பாஜக தலைமையிலான ஆட்சியில் இந்திய பல்கலைக் கழகங்களில் மாணவர் செயல்பாடுகளும் ஜனநாயகச் செயல்பாடுகளும் கடுமையான கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றன. இந்தியாவின் சிறந்த பல்கலைக்கழகங்களான JNU, AMU, JMI ஆகிய பல்கலைக்கழகங்களில் அரசாங்கத்தை விமர்சிக்கும் நடவடிக்கைகளுக்குக் கடுமையான நெருக்கடிகள் தரப்பட்டு ஒடுக்கு முறையைக் கையாண்டு வருகிறது பாஜக அரசு.

அதானி, அம்பானி போன்ற பல பாஜகவிற்கு நெருக்கமான கார்ப்பரேட் முதலாளிகள் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்தும், பாமர மக்கள் பொருளாதாரத்தில் வீழ்ச்சி அடைந்தும் வருகின்றனர். அரசு நிறுவனங்களைப் பயன்படுத்தி ED, IT சோதனைகள் மூலம் தங்களுக்குச் சாதகமாகச் செயல்படாத முதலாளிகள், பிற கட்சித் தலைவர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் ஆகியோரை பாஜக மிரட்டி வருகின்றது.

ஊடகச் சுதந்திரத்துக்கு எதிரான சட்டங்களால் இந்தியாவில் உள்ள பெரும் ஊடகங்கள் மக்களின் பிரச்னைகளைப் பேசுவதை விட அரசாங்கத்திற்குச் சாதகமாகவே செயல்

படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாகவே உலகளவில் ஊடகச் சுதந்திரக் குறியீடு பட்டிய லில் இந்தியா பின்னோக்கிச் செல்கிறது.

12 ஆண்டுகளாக பிரதமர் செய்தியாளர் சந்திப்பு நடத்தாதது, பாஜகவிற்கு ஆதரவாகத் தீர்ப்பளிக்கும் நீதிபதிகள் பதவிக் காலம் முடிந்ததும் MP ஆக்கப்படுவது, நாடாளு மன்றம் சரிவர நடத்தப்படாமல் இருப்பது, தேர்தல் ஆணையம் ஆளுங்கட்சி சார்பு நிலை யில் செயல்படுவது, வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் வெறுப்பைப் பரப்புவதிலே கவனம் செலுத்துவது என இளைஞர்களுக்கு அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

பாஜகவின் இயலாமையும் பொய்யான வாக்குறுதிகளும் மக்கள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது, ஆனால் இளைஞர்களின் நம்பிக்கையைப் பெற்ற பல மான எதிர்க்கட்சி இல்லாததனால் தங்கள் கோபத்தை வெளிப்படுத்த சரியான தளத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் இளை ஞர்கள். இவ்வேளையில்தான் 2026 மே 15 அன்று தலைமை நீதிபதி சூர்ய காந்த் 'கரப்பான் பூச்சிகளைப் போன்ற இளை ஞர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு எந்த வேலையும் கிடைப்பதில்லை, எந்தத் தொழிலிலும் அவர்களுக்கு இடமில்லை. அவர்களில் சிலர் ஊடகவியலாளர்களாகவும், சிலர் சமூக ஊடக, தகவல் அறியும் உரிமை ஆர்வலர்களாகவும், இன்னும் பிற ஆர்வலர் களாகவுமாகி எல்லோரையும் தாக்கத் தொடங் குகிறார்கள்' என்று கூறினார்.

இந்தக் கருத்து இளைஞர்கள் மத்தியில் கடு மையான எதிர்ப்பைப் பெற்றது. இதற்கு எதிர் வினை ஆற்றும் வகையில் 2026 மே 16 அன்று அபிஜித் திப்கே என்பவர் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி(CJP)யைத் தொடங்கினார். இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

CJPஇல் உறுப்பினர் ஆவதற்கான தகுதி களில் வேலையில்லாமல் இருப்பது, சோம் பேறியாக இருப்பது, எப்போதும் இணையத் தில் மூழ்கியிருப்பது, தொழில்முறையாகப் புலம்பும் திறன் கொண்டிருப்பது ஆகியவை அடங்கும். CJPஐத் தொடங்கிய அபிஜித் திப்கே புனேவில் இளங்கலைப் பட்டப்படிப் பிற்கான இதழியல் பயின்றார். பின்னர் உயர் கல்விக்காக இப்போது அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் பல்கலைக்கழகத்தில் மக்கள் தொடர்புத் துறையில் முதுகலைப் பட்டம் படித்து வருகிறார். 2020 முதல் 2023 வரை அவர் ஆம் ஆத்மி கட்சியின் சமூக ஊடகக் குழுவில் தன்னார்வலராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

CJPஇன் ஆதரவாளர்களில் 70% பேர் 28 வயதுக்குக் குறைவானவர்கள் என்றும், எந்தக் கட்சியுடனும் தங்களை இணைத்துக் கொள்ளாத அரசியல் சார்பற்றவர்கள் என்றும் அபிஜித் கூறினார். 'இந்தியாவில் வேலை யின்மை, வாழ்க்கைத் தரம் குறித்து அவர்கள் அரசாங்கத்தின் மீது விரக்தி அடைந்துள்ளனர். அதே சமயம் அவர்கள் எதிர்க்கட்சிகள் மீதும் விரக்தியடைந்துள்ளனர். ஏனெனில் அரசாங் கத்தைப் பொறுப்பேற்கச் செய்வதற்கு எதிர்க் கட்சிகள் குறிப்பிடத்தக்க எதையும் செய்ய வில்லை. அதனால் இளைஞர்கள் மிகுந்த விரக்தியில் உள்ளனர். அரசாங்கம் அவர்களின் கவலைகளைக் கண்டுகொள்ளவில்லை' என்று திப்கே கூறினார்.

கடுமையான விமர்சனங்களுக்குப் பின் னர் தனது கருத்திலிருந்து பின் வாங்கிய நீதிபதி சூரியகாந்த், 'இந்திய இளைஞர்களைக் குறி வைக்கவில்லை எனவும், தனது கருத்து சிலர் மோசடிப் பட்டங்களைப் பெறுவது தொடர்பானது என்றும், இளைஞர்கள் வளர்ந்த இந்தியாவின் தூண்கள்' என்று கூறினார்.

## CJP : சமூக வலைதளக் கணக்கா? அரசியல் இயக்கமா? Gen Z புரட்சியா?

CJP என்னும் தீயைப் பற்ற வைத்த தீப்பொறி, இந்தியத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் கூறிய அறியாமை நிறைந்த ஒரு கூற்றுதான். வேலை யில்லாத இளைஞர்களை அவர் கரப்பான் பூச்சி களுடன் ஒப்பிட்டபோது, அது அவர்களைப் புண்படுத்தியதோடு நின்றுவிடவில்லை. அவர் களுக்கு ஒரு கச்சிதமான அடையாளச் சின்னத் தையும் வழங்கியது.

2016 அமெரிக்க அதிபர் தேர்தலின்போது, ட்ரம்ப் ஆதரவாளர்களை விவரிக்க ஹிலாரி கிளிண்டன் பயன்படுத்திய ‘வெறுக்கத்தக்க வர்கள்’ என்ற சொல் ஒரு முழக்கமாக மாறி யது மட்டுமன்றி தேர்தலின் முக்கிய பேசு பொருளாகி ட்ரம்பின் வெற்றியை உறுதி செய் தது போலவே, இந்தியாவில் கரப்பான் பூச்சி மோசமான ஆட்சியிலிருந்து உயிர் பிழைப் பதற்கான ஓர் அடையாளமாக மாறியுள்ளது.

கரப்பான் பூச்சிகள் 30 கோடி ஆண்டு களுக்கும் மேலாக, அதாவது டைனோசர் களை அழித்த விண்கற்களின் தாக்குதல் உட் பட, பல பேரழிவுகளிலிருந்து தப்பித்த ஒரு பூச்சி. உலகம் இதுவரை கண்டிராத மிகவும் மீள்திறன் கொண்ட பூச்சிகளில் இதுவும் ஒன்று. ஒவ்வொரு நிலப்பரப்புச் சூழலுக்கும் ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் இந்த உயிரினத்தின் திறன் அபாரமானது. எனவே இந்த நையாண்டிப் பெயரில் ஓர் உண்மை பொதிந்துள்ளது. இருப்பினும், அதன் நிறுவனரின் நோக்கம் இந்த மீள்திறன் அம்சத் தைக் கருத்தில் கொண்டிருக்காமல் இருக்கலாம். ஆனால் அது தற்செயலாகவே நிகழ்ந்துள்ளது.

இளைஞர்கள் மத்தியில் CJPக்கு கிடைத்த வரவேற்பைப் பார்த்து தென்கிழக்கு ஆசியா வில் உள்ள இலங்கை, நேபாளம், வங்க தேசம் ஆகிய நாடுகளில் நடந்தது போலவே இந்தியாவிலும் நடக்கும் எனச் சிலர் கூறுகின்றனர். இது வங்கதேசம் அல்லது நேபாள மாணவர் இயக்கம் போன்றல்ல, என் பதைக் குறிப்பிட்ட அபிஜித், இது வெறும் அரசியலமைப்பு ரீதியான பொறுப்புக்கூறல் மட்டுமே என்று கூறினார். இந்தியாவில் அவ் வாறான புரட்சிக்கான வாய்ப்பு மிகக் குறைவு.

ஏனென்றால் முன்பில்லாத அளவிற்குப் பாஜக ஆட்சியில் அரசுக்கு எதிரான நட வடிக்கைகள் மீது கண்காணிப்பு அதிகமாக இருக்கிறது. அரசு நிறுவனங்கள் பாஜக சார்பு நிலையில் செயல்படுகின்றன. சமூக செயல்பாட்டாளர்கள் மீது UAPA போன்ற ஒடுக்குமுறைச் சட்டங்கள் பயன்படுத்தப் படுகின்றன. அரசியலமைப்புக்கு உட்பட்ட நடவடிக்கைகள் கூட கடுமையான ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்படுகிறது. அதை வழி நடத்தும் தலைவர்கள் தேச துரோக முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்ற னர். உதாரணமாக ஷர்ஜீல் இமாம், உமர் காலித் போன்ற பலர் இருக்கின்றனர்.

வங்கதேசச் சூழலும் இந்தியச் சூழலும் ஒன்றல்ல, வங்க தேசத்தில் ஜனநாயக நிறுவ னங்கள் கிட்டதட்ட இல்லாமல் ஆக்கப்பட்டன. ஆனால் இந்தியாவில் ஜனநாயக விழுமி யங்கள் இன்னும் உயிருடனே இருக்கின்றன. இதனால் தெருவில் இறங்கிப் போராடுவது இறுதிப் புகலிடமாக மாறுகிறது. ஆனால் CJP எழுச்சி, தெற்காசியா முழுவதும் நிலவும் ஒரு பரந்த போக்கைப் பிரதிபலிக் கிறது. இலங்கை, வங்கதேசத்தில் நடந்த கிளர்ச்சிகள், நேபாளத்தில் ஏற்பட்ட அமைதி யின்மை உட்பட அண்மைக் காலங்களில் அர சாங்க எதிர்ப்பு இயக்கங்களில் இளைஞர்கள் முக்கியப் பங்கு வகித்துள்ளனர்.

ஆனால் கடந்த பத்தாண்டுகளில் இந்திய நிறுவனங்கள், தேர்தல் பத்திரத் திட்டம் (Electoral bond), எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக CBI, அமலாக்கத்துறை பயன்படுத்தப் படும் விதம், அரசியலமைப்புச் சட்ட விவகாரங் களுக்காக உச்ச நீதிமன்றத்தில் காணப்படும் நீண்ட வரிசைகள் இவையெல்லாம் இருக்க, அமைதி யான ஜனநாயக வழிமுறைகள் மீதான நம்பிக்கை அதிகரிப்பது மிகக் கடினம்.

‘அமைதியான ஜனநாயக வழிமுறைகள்’ குறித்த அபிஜிதின் கூற்று, தேர்தலில் போட்டியிட விரும்பும் ஒரு கட்சியின் சொல்லாடலாகும். ஆனால், தேர்தல்களில் அடையாளப் பூர்வமாகப் போட்டியிடுவதி லிருந்து வேறுபட்டு தீவிரமாகப் போட்டி யிடுவதற்கு எந்த ஒரு கூகுள் படிவத்தாலும் வழங்க முடியாத சில விஷயங்கள் தேவைப் படுகின்றன. அதற்குப் பணம், தொண்டர்கள், உள்ளூர் தலைமை தேவை. மேலும் CJP தொடங்கப்பட்டதும் அதை பாஜகவிற்கு எதிரான எதிர்கட்சிகளின் சூழ்ச்சி எனவும், முன்பு ஆம் ஆத்மி உடனான அபிஜிதின் தொடர்பை முன்வைத்தும் பலர் விமர்சித்தனர்.

அதைத் தெளிவுபடுத்தும் வகையில்

CJP எந்தவொரு அரசியல் அமைப்புடனும் இணைக்கப்படவில்லை என்று அபிஜித் கூறினார். CJP அடிமட்ட உறுப்பினர்களை கொண்ட இயக்கமல்ல, அது ஒரு டிஜிட்டல் பரப்புரைதான் எனச் சிலர் அதைக் குறைத்து மதிப்பிட்டனர். இணையத்தில் மட்டும் செயல் பட்டுக் கொண்டிருந்த CJP உறுப்பினர்கள் இப்போது களத்தில் கரப்பான் பூச்சிகளாக வேடமிட்ட போராட்டக்காரர்களாக மாறி யுள்ளனர். இது குறித்துப் பேசிய அபிஜித் திப்கே 'இது இணையத்தில் தொடரும், தேவைப் பட்டால் களத்திலும் இறங்கும். இணையத்தில் தொடங்கிய இயக்கம் சமூக ஊடகங்களுக்குள் மட்டுமே முடங்கிவிட வாய்ப்பில்லை. இது இந்தியாவுக்கு வந்துள்ள இயக்கம். இது அரசியல் உரையாடலை மாற்றும்' என்றார்.

சுமார் 200,000 பின்தொடர்பவர்களைக் கொண்டிருந்த CJPஇன் வலைதளக் கணக்கு இந்தியாவில் முடக்கப்பட்டிருப்பதாக X தளத் தில் அபிஜித் திப்கே எழுதியிருந்தார். இது அந்த இயக்கத்தின் மீதான முதல் வெளிப் படையான கட்டுப்பாடுகளில் ஒன்றாகும். அதற்கான காரணம் உடனடியாகத் தெரிய வில்லை. இது CJP குறித்தான அரசாங்கத்தின் பயத்தைக் காட்டுகிறது.

## புதிய பாதையை நோக்கி இந்திய அரசியல் களம்

இந்திய அரசியல் ஒரு புதிய பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. புரட் சிக்குப் பெயர்போன தெற்காசியாவில் உள்ள பல நாடுகளில் பெரும் அரசியல் மாற்றத்தை இளைஞர்கள் குறிப்பாக Gen Z தலைமுறையினர் ஏற்படுத்தியுள்ளனர். அந்த வகையில் இந்தியாவில் தலைமை நீதிபதி சூரியகாந்த் இளைஞர்களைக் கரப்பான் பூச்சி எனக் கூறிய அன்று மதியமே திப்கே அவரது X வலைதளப் பக்கத்தில் What if all cockroaches come together? என்று பதிவிட்டார்.

அந்தப் பதிவு சிலமணி நேரங்களில் 700 முதல் 800 நபர்களால் மறுபதிவு(repost) செய்யப்பட்டது. அதில் பெரும்பாலானோர் Gen Z, அவர்கள் நாம் நிச்சயமாக ஒன்று சேர வேண்டும் எனக் கருத்து தெரிவித்தனர். மேலும் 72 மணி நேரத்திற்குள், கரப்பான் பூச்சி ஜனதா கட்சி(CJP) கூகுள் ஃபார்ம் மூலம் 3,50,000க்கும் மேற்பட்ட உறுப்பினர் களையும், இன்ஸ்டாகிராமில் 11 மில்லியன் பின்தொடர்பவர்களையும் பெற்றது.

2026 மே 22 நிலவரப்படி, CJP அதிகாரப் பூர்வமாக இன்ஸ்டாகிராமில் பாஜகவை முந்தியுள்ளது. மேலும் 20 மில்லியனுக்கும் அதிகமான பின்தொடர்பவர்களைக் கொண் டுள்ளது. இவ்வளவு குறுகிய காலத்தில் இந்த எண்ணிக்கை அபரிமிதமானது. பொதுவாக பாரம்பரிய அரசியல் கட்சிகளின் உறுப்பினர் சேர்க்கை என்பது நீண்ட செயல் முறையைக் கொண்டதாக இருக்கும். அவர்களின் வலை தளப் பக்கங்களைக் கையாள பல குழுக்கள் இருக்கும். இதற்குப் பெரிய அளவிலான நிதியும் தேவைப்படும். அனைத்து மரபார்ந்த வழிமுறைகளையும் தகர்த்தெறிந்து, எந்த ஒரு பெரிய குழுவோ நிதியோ இல்லாமல் CJP மிகக் குறுகிய காலத்தில் இந்த வளர்ச்சியை அடைந்திருக்கிறது.

ஆனால் மரபார்ந்த அரசியல்வாதிகள், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் எழுச்சியை உற்றுப் பார்த்துக்கொண்டே, அதை Gen Z தலைமுறையினரின் இரைச்சல் அல்லது சமூக ஊடக மோகம் என்று கூறிப் புறக்கணிக் கிறார்கள். அது ஒரு மாபெரும் தவறு. இத்தாலியில் உள்ள ஃபைவ் ஸ்டார் இயக் கத்திலிருந்து ஒருவர் பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். தொடக்கத்தில் 2005இல் நகைச்சுவையாளர் பெப்பே கிரில்லோவின் வலைப்பதிவாகத் தொடங்கப்பட்ட இது, படிப்படியாக 2018இல் நாடாளுமன்றத்தின் மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்தது. கிரில்லோவுக்கு களத்தில் ஆட்கள் இல்லை; இத்தாலிய மேல்தட்டு மக்களைத் தாண்டிப் பரவிய ஒரு வைரல் வெடிப்பை(viral outbreak) அவர் எளிதாகப் பயன்படுத்திக் கொண்டார்.

CJP என்பது இந்தியாவின் பதிப்பாகும், ஆனால் இதில் ஒரு தனித்துவமான சாதுரிய அம்சம் உள்ளது. இது சம்பாஜி நகரில் உள்ள ஒரு சிறுவன், ஒரு பாரம்பரியப் பேரணியில் கலந்து கொள்ளாமலேயே ஒரு

தேசிய இயக்கத்தில் பங்குதாரராக இருக்க அனுமதிக்கிறது. இதில் முக்கிய நபர்களாக ஆஷிஷ் ஜோஷி (ஓய்வு பெற்ற மத்திய அரசு அதிகாரி), மஹுவா மொய்த்ரா(மேற்கு வங்க MP), அண்டை மாநிலமான பீகாரைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீர்த்தி ஆசாத் உட்பட பலர் பதிவு செய்துள் ளனர்.

20ஆம் நூற்றாண்டில் பலத்தை நிரூபிப் பது என்பது தெருக்களில் இறங்கக் கூடிய மக்களின் எண்ணிக்கையைப் பற்றியதாக இருந்தது. இன்றோ அது கூட்டுத் திரை நேரத் தைக் கைப்பற்றுவதாக இருக்கிறது. கவனம் என்பது வெவ்வேறு தளங்களில் உடனடியாகப் பரவுவதால், அது நிலையற்றது என்பதை CJP நிரூபித்துள்ளது. அரசியல் கட்சிகளின் பாரம்பரியமான தகவல் தொழில்நுட்பப் பிரிவு களால் இதை எதிர்கொள்ள முடியாது, ஏனெ னில் சூறையாடுவதற்குத் தலைமையகமோ, விலைக்கு வாங்கக்கூடிய குறிப்பிட்ட தலை மையோ அங்கு இல்லை. அது ஒரு மாயக் கட்சி. எல்லா இடங்களிலும் இருந்தும் எங்குமே இல்லாத ஒரு பரவலாக்கப்பட்ட, தன்னாட்சி பெற்ற அமைப்பு.

பாரம்பரியக் கட்சி உறுப்பினர்களைக் கைது செய்யவோ அல்லது விலைக்கு வாங் கவோ முடியும். ஆனால், ஓர் அல்காரிதத்தை எப்படிச் சிறையில் அடைப்பது? இதற்கு மற் றொரு வாழும் உதாரணம் தமிழ்நாட்டின் தவெக கட்சி. அதிகாரப்பூர்வமாகக் கட்சி தொடங்கி 3 ஆண்டுகளில் இரண்டு வலுவான மாநிலக் கட்சி களை வீழ்த்தி ஆட்சி அமைத்துள்ளது. ஆனால் மிகக் குறைந்த அளவிலேயே பொதுக்கூட்டம், பேரணி, பரப்புரை ஆகியவை நடத்தப்பட்டது. அவர்களின் முக்கிய பரப்புரைக் களமாக மொபைல் திரையே இருந்தது.

இப்போது இந்தியத் தேர்தல் என்பது ஓர் எண்ணிம தேர்தலாக(digital election) மாறியுள்ளது. இது இந்திய அரசியலின் புதிய சகாப்தம். அபிஜித் திப்கேயின் நையாண்டிக் கட்சிக்கு நான்கு தகுதி அளவுகோல்கள் உள்ளன: வேலையில்லாதவர்கள், சோம் பேறிகள், எப்போதும் இணையத்தில் மூழ்கி யிருப்பவர்கள், தொழில்முறையாகக் குறை கூறக்கூடியவர்கள்.

**X தளத்தில் CJPயின் கொள்கை முழக்கம்:** இளைஞர்களின், இளைஞர்களால், இளைஞர் களுக்கான அரசியல் முன்னணி. மதச்சார்பற்ற சோசலிச ஜனநாயக சோம்பேறி இயக்கம் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்ஸ் டாகிராமில், அந்தக் கட்சி தன்னை ‘சோம் பேறி, வேலையில்லாத கரப்பான் பூச்சிகளின் ஒன்றியம்’ என்று அடையாளப்படுத்திக் கொண்டு, GEN Z தலைமுறையினரைத் தங் களுடன் சேருமாறு அழைப்பு விடுக்கிறது.

அபிஜித் திப்கேவின் இணையவழிப் பக்கம் ஒரு முழு இயக்க வடிவைப் பெறு வதற்கான வேலைகள் செய்யப்பட்டு வரு கிறது. CJPஇன் செய்தித் தொடர்பாளராக மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். அமெரிக் காவில் இருக்கும் திப்கே இந்தியா வந்து, நீட் வினாத்தாள் கசிவை எதிர்த்து ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என டெல்லியில் பெரும் போராட்டம் நடத்தி உள்ளார்.

இதன் மூலம் அரசாங்கத்தின் பீதி கண் கூடாகத் தெரிகிறது. கைது செய்யவோ அல்லது விலைக்கு வாங்கவோ கூடிய கண்ணுக்குப் புலப்படும் எதிரிகளை எதிர்த்துப் போராடவே அவர்கள் பயிற்சி பெற்றவர்கள். ஆனால், ஓர் அல்காரிதத்தை எப்படிச் சிறையில் அடைப்பது? இலட்சக்கணக்கான திரைகளில் பரவியிருக்கும் ஓர் உணர்வுக்கு எப்படி இலஞ்சம் கொடுப்பது?

டிஜிட்டல் கிளர்ச்சி வந்துவிட்டது. அது பாரம்பரிய அரசியல் தலைவர்கள் இன்னும் படித்துப் பார்க்காத விதிகளின்படி இயங்கு கிறது. பிரதான ஊடகங்கள் காற்று எந்தத் திசையில் வீசுகிறது என்று இன்னும் கண்டறிய முயன்று கொண்டிருக்கும் வேளையில், ஒரு புயல் ஏற்கெனவே தாக்கிவிட்டது.

ஏற்கனவே இருந்த கட்சிகள் டிஜிட்டல் பரப்புரைக்காக பல கோடி ரூபாய் செலவு செய்கின்றனர். இதற்குப் பின்னர் பாரம்பரிய அரசியல் யுக்திகளைக் கைவிட்டு புதிய Gen Z அரசியலை நோக்கி நகரப் போகின்றனர்.

● சேயன் இப்ராகிம்



# பாலியல் வல்லுறவுகள் – தீர்வு என்ன?

2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்தி குளம் அருகேயுள்ள கிராமத்தில் இயற்கை உபாதையை கழிக்கச் சென்ற 10ஆம் வகுப்பு மாணவி காமுகன் ஒருவனால் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்ட செய்தி நாடெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தேர்தலுக்கு ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்தக் கொடூரச் சம்பவம் அன்றைய திமுக ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என அனைத்து எதிர்க்கட்சிகளும் குற்றம் சாட்டின. தவெக தலைவர் விஜய் தனது தேர்தல் பரப்புரைகளின் போது இந்தச் சம்பவத்தைச் சுட்டிக் காட்டியே திமுக ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும், தான் ஆட்சிக்கு வந்தால் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது என்றும் உறுதியளித்தார்.

இந்தச் சம்பவம் நடந்த ஒன்றிரண்டு நாள்களிலேயே தூத்துக்குடி மாவட்ட காவல் துறை அதிகாரிகள் மிக விரைந்து செயல்பட்டு குற்றவாளியைக் கண்டுபிடித்து கைது செய்தனர். அவன் மீது சில நாள்களிலேயே குற்றப்பத்திரிகையையும் தாக்கல் செய்தனர். இந்த வழக்கை மிக விரைவாக விசாரித்த தூத்துக்குடி குற்றவியல் நீதிமன்றம், குற்ற வாளிக்கு மரண தண்டனை விதித்து சில நாள்களுக்கு முன்னர் தீர்ப்பளித்தது. அதாவது குற்றம் நடைபெற்ற எழுபது நாள்களுக்குள், நீதிமன்றம் விசாரணை நடத்தி தண்டனை வழங்கியுள்ளது. மிக விரைவாக நடத்தி முடிக்கப்பட்ட விசாரணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்ப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அரசு வழக்கறிஞர் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளியை உடனே கண்டுபிடித்து சட்டத்தின் முன் கொண்டு வர வேண்டுமென அன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். அதன் படியே நாங்கள் செயல்பட்டோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது போலவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா பல்கலைக்கழக வளாகத் தில் பல்கலைக்கழக மாணவியை பாலியல் கொடுமை செய்த ஒரு காமுகனை விரைந்து செயல்பட்டு கைது செய்த காவல்துறை, நான்கைந்து மாதங்களுக்குள்ளாகவே அவனுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை வாங்கிக் கொடுத்தது.

நான் அறிந்த வரை தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இதுபோன்ற குற்றச் சம்பவங்கள் அவ்வப்போது நடை பெற்றுக் கொண்டுதான் இருந்தன. தமிழ் நாட்டில் மட்டுமல்ல அனைத்து மாநிலங் களிலும் பாஜகவினரே இதுபோன்ற பாலியல் வன்கொடுமைகளிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதும் அவர்களைப் பாதுகாக்கவே அந்த மாநில அரசுகள் செயல்பட்டன என்பதும் நாடறிந்த வரலாறு.

கடந்த 10.5.26 அன்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவி யேற்ற பிறகு கோவை சூலூர் பகுதியில் 10 வயது சிறுமி கடத்தப்பட்டு, பாலியல் வன்முறை செய்யப்பட்டு கொலை செய்யப் பட்டார். இந்தச் சம்பவம் பெரும் கொந் தளிப்பை ஏற்படுத்தியது. தூத்துக்குடி மாவட் டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியில், வேலை வாங்கித் தருவதாகக் கூறி இளம் பெண் ஒருவர் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார். இதில் ஆளுங்கட்சியான தவெக நிர்வாகிகள் இருவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. விழுப் புரம் பகுதியில் ஒரு சிறுமி மீதான பாலியல் தாக்குதல் உட்பட பல் வேறு குற்றச் சம்ப வங்கள் பதிவாகியுள்ளன.

எதிர்க்கட்சிகள் விடுவார்களா? இந்த ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என கண்டனம் தெரிவிக்க ஆரம் பித்து விட்டனர். தேர்தல் பரப்புரையின் போது, திமுக ஆட்சியில் பெண்கள் நடமாட முடிய வில்லை; வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றனர் என தவெக தலைவர் ஜோசப் விஜய் உரத்த தொனியில் பேசி னார் அல்லவா? அதனையே சுட்டிக் காட்டி இப்போது எதிர்க்கட்சிகள் அரசைக் குற்றம் சொல்ல ஆரம்பித்து விட்டன.

ஆனால் நமக்கு முன் எழும் கேள்வி என்னவென்றால் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற இந்த வன்முறைகளுக்கு அரசு மட்டுமே பொறுப்பேற்க வேண்டுமா? சமூகத்திற்கு இதில் எந்தவிதமான பங்கும் இல்லையா என்பதேயாகும். இந்தக் குற்றங் கள் அரசின் ஆதரவில் நடைபெறுபவை அல்ல. நாம் கவனிக்க வேண்டியது என்ன வென்றால் அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கைது செய்கிறதா? யாரையாவது பாதுகாக்க இந்தக் குற்றங்களை மூடி மறைக்க முயலுகிறதா? தனது கட்சிக் காரர்கள் இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபட் டிருந்தால் அவர்களைக் காப்பாற்ற முயலு கிறதா என்பதேயாகும்.

என்னதான் காவல்துறையினர் கண் காணிப்புப் பணிகளை மேற்கொண்டாலும் இதுபோன்ற குற்றச் செயல்கள் நடைபெறத் தான் செய்யும். ஏனெனில் மனித சமூகம் நல்ல வர்களையும், கெட்டவர்களையும், திருடர் களையும், காமுகர்களையும் உள்ளடக்கியதே. எனவே பாலியல் ரீதியான வன்சம்பவங்கள் நடைபெறவே செய்யும். அரசு ஒரு வீட் டுக்கு ஒரு காவல் என்று நியமித்து சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க இயலாது. ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட பெரு நகரத்தில் 30இலிருந்து 50 காவலர்கள் தான் தற்போது இருக்கின்றனர்.

## இந்தக் குற்றங்கள் குறைவதற்கு அரசு செய்ய வேண்டியதென்ன?

1. உடனடியாக விசாரணை நடத்தி குற்ற வாளிகளைக் கைது செய்ய வேண்டும்.
2. எந்தவிதமான காலதாமதமும் இல்லாமல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்ய வேண்டும்.
3. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் நீதிமன்றம் விசாரணை நடத்தி குற்றவாளி களுக்குத் தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
4. நீதிமன்றங்களும் இதுபோன்ற வழக்கு களை மற்ற வழக்குகளைப் போல் கருதா மல் முன்னுரிமை கொடுத்து விரைந்து விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும்.
5. இந்தக் குற்றங்கள் மீண்டும் நடைபெறாத வண்ணம் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.

## சமூகம் என்ன செய்ய வேண்டும்?

இன்றைக்கு நாட்டில் சமூக ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். சமூக ஒழுங்கு சீர்குலைந்ததன் காரணமாக நாட்டில் சட்டம் ஒழுங்கும் சீர்குலைந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் கொலைச் சம்பவங்கள் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்தக் கொலைச் சம்பவங்களுக்கு தகாத பாலியல் உறவுகளே பெரும்பாலும் காணரங்களாக இருக்கின்றன. ஏன்? வீடுகளில் கூட பெண்கள், சிறுமிகள் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகின்றனர். செய்தித்தாள்களையும், காவல்துறையின் விசாரணை அறிக்கைகளையும் படிக்கின்ற போது இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களில் 90 விழுக்காட்டினர் போதையில் இருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

போதையில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று கள், சாராயம் அருந்தியதால் ஏற்படும் போதை. இன்னொன்று கஞ்சா, ஹெராயின் ஆகிய போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் போதை. அண்மைக் காலமாக இளைஞர்களிடையே இந்த இரண்டாவது வகை போதைப் பழக்கம் அதிகரித்து வருகிறது. மதுவையும், கஞ்சாவையும் தொடர்ந்து பயன்படுத்தும் ஒருவனது மூளை சிந்திக்கும் திறனை இழந்து விடும். அவனுக்கு எது நல்லது, கெட்டது என்று பகுத்தறியத் தெரியாது. தான் நினைத்ததை நிறைவேற்ற முனைப்புக் காட்டுவான்.

போதையைத் தவிர, இன்றைக்கு இளைஞர்களைப் பெரிதும் சீரழிப்பது அலைப்பேசியும், திரைப்படங்களும். மிகவும் மோசமான ஆபாசக் காட்சிகள், உடலுறவுக் காட்சிகள் அலைப்பேசியில் வருகின்றன. இவற்றைப் பார்க்கின்ற இளைஞர்களின் மனநிலை என்னவாக இருக்கும்? தொடர்ந்து இந்தக் காட்சிகளைப் பார்க்கின்ற காரணத்தால் அவர்களின் காம உணர்ச்சி தூண்டப்படுகிறது. அண்மைக் காலமாக வெளிவருகின்ற திரைப்படங்களிலும் மிக மோசமான காதல் காட்சிகளும், வன்முறைக் காட்சிகளும் இடம் பெறுகின்றன. இவை இளைஞர்கள் இளம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள மோசமான தாக்கம் காரணமாகவே குற்றச் செயல்களில் ஈடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது.

முதலில் சமூகம் திருந்த வேண்டும். பின்னர்தான் அரசைக் குறைக் கூற வேண்டும். மதுவுக்கும், கஞ்சாவுக்கும் எதிரான பரப்புரைகளை சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும். இதனை ஒரு தொடர் இயக்கமாகவே செய்ய வேண்டும். அலைப்பேசியில் ஆபாசக் காட்சிகள் வருவதைத் தடுக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அலைப்பேசியைப் பயன்படுத்துகின்ற சிறுவர் சிறுமிகளைப் பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும். பெற்றோர்களே எப்போதும் அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தால், பிள்ளைகளை அவர்களால் திருத்த முடியாது. அண்மையில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் சிறார் பிரிவான CIO ‘திரையில் விளையாடாதே; தரையில் விளையாடு’ என்ற ஒரு பரப்புரையை அலைப்பேசிக்கு எதிராக மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே, திரைப்படங்களுக்குத் தணிக்கைச் சான்றிதழ் வழங்குகின்ற தணிக்கைத் துறை ஆபாச, வன்முறைக் காட்சிகள் கொண்ட படங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது.

திரைப்படத் தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும், நடிகர் நடிகைகளும் தங்களது வீடுகளிலும் பெண்கள் இருக்கிறார்கள். சிறுவர் சிறுமிகள், குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து படங்களை எடுக்க வேண்டும். காட்சிகளை அமைக்க வேண்டும்.

குற்றங்களைத் தடுப்பதில், குறிப்பாக பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளைத் தடுப்பதில் அரசு, சமூகம் என்ற இரு தரப்பினருக்கும் சம பங்கு உள்ளது. வெறுமனே அரசை மட்டும் குறைக் கூறிக் கொண்டிருந்தால் அதனால் விளையப் போவது ஒன்றுமில்லை.


CUPI
தொழில் முனைவோருக்கான
சிறப்பு திட்டங்கள் மற்றும் சலுகைகள்
மேலும் அறிய எங்களை தொடர்பு
கொள்ளுங்கள்
சில்லறை ரொக்க
செலவுகளுக்கு பதில்
கட்டுப்படுத்தப்பட்ட UPI
செலவுகள்
கேஷ் கையாளுதல் இல்லை.
ரீஇம்பர்ஸ்மெண்ட் சிக்கல்கள் இல்லை.
நிறுவன செலவுகளுக்காக சிறப்பு UPI பணப்பைகள் வழங்கல்
நேரடி செலவு கண்காணிப்பு
ஒவ்வொரு ஊழியருக்கும் செலவு வரம்புகள்
நிதி குழுவிற்கான மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு பலகை
CUPI
மேலும் தகவல்களுக்கு
+91-9740510088
www.getcupi.com
Trusted by
YUKI
SKYLARK™ DRONES
Cothas
TeamLease
And many more

# மினுமினுக்கும் திரைக்குப் பின்னால்..!

– **முகமது கபீர்,** செயற்கை நுண்ணறிவுப் பொறியாளர்

இன்றைய நவீன சமூகம் ஒரு மெல்லிய, ஆனால் ஆபத்தான திரைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறது. அதை செல்வச் செருக்கு(Wealth Audacity) என்று அழைக்கலாம். இது வெறும் ஆடம்பரம் மட்டுமல்ல; ‘என்னிடம் இல்லையென்றாலும், இருப்பதாகவே வாழ்ந்து காட்டுவேன்’ என்கிற ஒரு விதமான பொருளாதாரத் திமிர் அல்லது சமூக நிர்பந்தம்.

வெளியே இருந்து பார்க்கும்போது சமூகம் பொருளாதார ரீதியாக மகிழ்ச்சியாக(Economically Happy) இருப்பது போன்ற ஒரு தோற்றமயக்கம்(Illusion) உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தத் திரையைச் சற்று விலக்கிப் பார்த்தால் அங்கே தெரிவது மகிழ்ச்சி அல்ல; மூச்சுத் திணற வைக்கும் கடன் சுமை.

## அண்டை வீட்டுக்காரர் ஒரு குறியீடு

ஒருவர் தனி நபர் அல்ல, இன்றைய நடுத்தர வர்க்கத்தின் பிரதிபலிப்பு. சமூகம் ஒருவரை எப்படிப் பார்க்கிறது? ஒரு நல்ல வேலை, கார், வசதியான வீடு, சிரித்த முகம். சமூகம் அவருக்கு வெற்றியாளன் என்ற முத்திரையைக் குத்துகிறது. ஆனால் அந்தப் பிம்பத்தைக் காப்பாற்ற அவர் சுமக்கும் சிலுவைதான் 10 இலட்சம் ரூபாய் கடன்.




இங்கு பிரச்சனை கடன் அல்ல. மறைத்தல் (The Veil).

ஒருவர் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்? வங்கியின் நெருக்கடியை விட, ‘எனக்குக் கடன் இருக்கிறது என்று தெரிந்தால், இதுவரை நான் கட்டிக்காத்த என் இமேஜ் (Image) உடைந்துவிடுமே’ என்ற பயமே அவரைக் கொல்கிறது.

தன் சோகத்தைப் பகிர முடியாத ஒரு தனிமைச் சிறையில் அவர் அடைபடுகிறார். சமூகம் வெற்றியை மட்டுமே கொண்டாடும்போது, தோல்விகளையோ சறுக்கல்களையோ பகிர்வது அவமானமாகக் கருதப்படுகிறது. அந்த அவமானத்தைத் தாங்க முடியாத பலவீனமான கணத்தில்தான், ஓர் உயிர் ஊசலாடி அடங்குகிறது.

யார் உண்மையில் பாதிக்கப்படுகிறார்கள்? இங்கு பாதிக்கப்படுவது இரண்டு தரப்பினர்:

1. ***பாசாங்கு செய்பவர்*** தான் உருவாக்கிய போலியான பிம்பத்திற்குத் தீனி போட முடியாமல் திணறுபவர்.

2. ***பார்வையாளர்*** அந்தப் போலியான வாழ்க்கையைப் பார்த்து, ‘நாமும் இப்படி வாழவில்லையே’ என்று தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டு, அந்தப் போட்டியில் இணையத் துடிப்பவர்.

இது ஒரு நச்சுச் சுழற்சி(Toxic Cycle). பொருளாதார வளர்ச்சி என்பது எண்களில் உயர்ந்துள்ளது. ஆனால் மனிதர்களின் மன அமைதி அதலபாதாளத்தில் விழுந்துவிட்டது. இது வளர்ச்சியா? அல்லது வீக்கமா?

அடுத்த வீட்டுக்காரர் மகிழ்ச்சியாக இருக்கிறாரா அல்லது கடனில் இருக்கிறாரா என்று பார்க்க நமக்கு ஒரு மந்திரக் கண்ணாடி(Magic Mirror) தேவையா? நிச்சயமாக இல்லை. நமக்குத் தேவை சுய போதையில் (Self overdosed) இருந்து விடுபடுதல்.

இன்று நாம் ஒவ்வொருவரும் நம்மைப் பற்றிய சிந்தனையிலேயே (Self-obsessed) அதிகம் மூழ்கிக் கிடக்கிறோம். அடுத்தவரின் கண்ணில் படும் துயரத்தை விட, நம் காலில் அணிந்திருக்கும் செருப்பின் விலை உயர்ந்ததா என்பதே நமக்கு முக்கியமாக இருக்கிறது.

‘மந்திரக் கண்ணாடி தேவையில்லை: சக மனிதனின் வாழ்க்கையை, அவனது ஆடம்பரப் பொருட்களை வைத்து எடைபோடுவதை நிறுத்தினாலே போதும். அந்த மாயத்திரை விலகிவிடும்.

## தேவை மனமாற்றம்

கடன் பிரச்னை என்பது ஒரு பொருளாதாரச் சிக்கல் மட்டுமே, அது வாழ்க்கையின் முடிவு அல்ல என்பதை உரக்கச் சொல்லும் சமூகச் சூழல் தேவை.

## நிதர்சனம் புரிவோம்

கடன் வாங்கி வாழ்வது தவறல்ல; ஆனால் கடன் வாங்கியாவது ஊரை மெச்ச வைக்க நினைப்பது தற்கொலைக்குச் சமம். செய்தித்தாள்களில் தற்கொலைச் செய்தி வரும்போது, ‘அடடா, பாவம்’ என்று சொல்லிவிட்டு நகர்வதை விட, ‘என்னிடம் பேசுவதற்கு யாராவது இருக்கிறார்களா?’ என்று தேடும் ஒரு சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்.

வாழ்க்கை என்பது அடுத்தவருக்கு நிரூபிப்பதில் இல்லை; நாம் நிம்மதியாக வாழ்வதில் உள்ளது. அந்தப் போலித் திரையைக் கிழித்தெறிவோம். ஏனெனில் நிம்மதியான தூக்கமே உலகின் மிகப்பெரிய சொத்து.


HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com



# ஆனைமங்கலம் செப்பேடு:

## சோழர் இராஜசாசனத்தில் ஓர் இஸ்லாமிய எழுத்தரின் முத்திரை!

**- நெடுஞ்சரமன் ஷேக் அப்துல்லாஹ்**

**மனிதர்கள் தங்களுக்குள் மதத்தின் பெயராலும், வழிபாட்டு முறைகளின் பெயராலும் தற்காலிக எல்லைக் கோடுகளைக் கீறிக்கொண்டிருக்கும்போது காலத்தின் ஏதோ ஒரு மூலையிலிருந்து வெளிப்படும் ஓர் ஒற்றை ஆவணம் அந்த எல்லைக் கோடுகளைத் தன் போக்கில் அழித்துச் செல்கிறது.**

**அப்படி ஒரு வரலாற்றுப் பிரகடனமாக நெதர்லாந்து நாட்டுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் லைடன்(Leiden) பல்கலைக்கழக அதிகாரிகளால் அதிகாரப் பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது சோழர் காலத்து ஆனைமங்கலம் செப்பேடு. சர்வதேச அளவில் 'பெரிய லைடன் செப் பேடு' (Larger Leiden Plates) என்று அழைக் கப்படும் 30 கிலோ எடையுள்ள வரலாற்றுப் பெட்டகம் தாயகம் திரும்பியிருப்பது தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு புதிய விடிய லாகும்.**

### சோழர் கால அரசியல் சூழலும் செப்பேட்டின் உருவாக்கமும்

கி.பி.11ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் சோழப் பேரரசு கடல் கடந்த வணிகத்திலும் கடற்படை அதிகாரத்திலும் உச்சத்தில் இருந்தபோது இந்தச் செப்பேடு உருவானது. சைவ சமயத்தின் மீது பற்று கொண்ட சோழ மன்னர்கள் சர்வதேசத் தூதரக உறவுகளைப் பேணி வந்தனர்.

அக்காலத்தில் இன்றைய இந்தோ னேசியப் பகுதியான ஸ்ரீவிஜய நாட்டு அரசன் மாறவிஜயோத்துங்க வர்மன், தமிழ கத்தின் முதன்மைத் துறைமுக நகரான நாகப் பட்டினத்தில் பௌத்தத் துறவிகளுக்காக ஒரு விகாரையைக்(ஆலயம்) கட்ட அனுமதி கோரினான். அதற்குப் பெருமனதோடு அனு மதி அளித்த மன்னர் முதலாம் இராஜராஜ சோழன், 'சூடாமணி விகாரம்' (இராஜராஜ சோழன் பெரும்பள்ளி) என்ற அந்த பௌத்த ஆலயத்தின் தினசரிப் பராமரிப்பிற்காக 97 வேலி பரப்பளவு கொண்ட 'ஆணமங்கலம்' என்ற ஒட்டுமொத்தக் கிராமத்தின் நில வரு வாயையும் கொடையாக அள்ளித் தந்தார்.

தந்தையின் மறைவுக்குப் பின் அரி யணை ஏறிய அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழன் இந்த வாய்மொழி ஆணையை முறைப்படுத்தி 21 பெரிய செப்பு ஏடுகளில் அரசாணையாகப் பொறித்து சோழர்களின் அதிகாரப்பூர்வ இராஜ முத்திரையுடன் வெண்கல வளையம் பூட்டி நிரந்தர ஆவணமாக மாற்றினான்.

### டச்சுக்காரர்களால் எடுத்துச் செல்லப்பட்ட விதம்

சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாகப்பட் டினப் பகுதி டச்சுக்காரர்களின் ஆதிக்கத் தின் கீழ் வந்தது. அப்போது ஏற்பட்ட போர்கள், அரசியல் குழப்பங்களின் போது, உள்ளூர் மக்களால் நிலத்தடியில் புதைத்துப் பாதுகாக்கப்பட்ட இந்தச் செப் பேடுகள் டச்சுக்காரர்களின் கைகளில் கிடைத்தது.

கி.பி.1712 வாக்கில் நாகப்பட்டினத்தில் டச்சு பாதிரியாராக இருந்த புளோரெண்டியஸ் காம்பர்(Florentius Camper) என்பவரால் இந்தச் செப்பேடுகள் நெதர்லாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் அவரது வாரிசுகளால் 1862இல் புகழ்பெற்ற லேடன் பல்கலைக்கழக நூலகத்தின் ஆசியப் பிரிவிடம்(UBL - University of Leiden Library / லேடன் பல்கலைக்கழக நூலகம்) ஒப்படைக்கப்பட்டது.

அதற்கு முன்னதாக கிழக்கிந்தியத் தீவுகளில் வர்த்தகம் செய்து வந்த புகழ்பெற்ற டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் (VOC - Vereenigde Oostindische Compagnie / ஐக்கிய டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி) ஆவணக் காப்பகப் பதிவுகளின் வழியேதான் உலகளாவிய வரலாற்று அறிஞர்கள் இந்தச் செப்பேட்டின் தொன்மையை முதன்முதலில் கண்டறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2022 கொள்கை மாற்றமும் பிரதமர் மோடியிடம் ஒப்படைப்பும்

காலனியகாலத்தில்கொண்டுசெல்லப்பட்ட இந்தத் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சொத்தை மீட்பது எளிதாக இருக்கவில்லை. இந்தியா 2012 முதலே இதற்கான தூதரக முயற்சிகளை எடுத்து வந்தது. திருப்புமுனையாக கடந்த 2022ஆம் ஆண்டு நெதர்லாந்து அரசு ‘காலனிய காலத்தில் பிற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சொத்துகளை முறையான ஆதாரங்கள் இருந்தால் அந்தந்த நாடுகளிடமே திருப்பி ஒப்படைப்போம்’ என்று ஒரு புதிய மீட்புக் கொள்கையை (Restitution Policy) கொண்டு வந்தது.

யுனெஸ்கோவின்(UNESCO) மீளளிப்புக்கான சர்வதேசக் குழுவின் 24ஆவது கூட்டத்தொடரில், இந்தச் செப்பேட்டின் தாயகம் இந்தியாதான் என்பது சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட்டது. பேச்சுவார்த்தைகளின் பயனாக நெதர்லாந்து தலைநகர் தி ஹேக்(The Hague) நகரில் நடைபெற்ற அதிகாரப்பூர்வ விழாவில் நெதர்லாந்து பிரதமர் ராப் ஜெட்டன்(Rob Jetten) முன்னிலையில் லேடன் பல்கலைக்கழக வாரியம் இச்செப்பேட்டைப் பிரதமர் மோடியிடம் ஒப்படைத்தது.

இதைப்பற்றி லேடன் பல்கலைக்கழக வாரியத் தலைவர் லுக் செல்ஸ்(Luc Sels) குறிப்பிடும்போது, ‘இந்தச் செப்பேடுகள் இந்தியாவின் மிக உயரிய வரலாற்று மதிப்புமிக்கவை என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம்; அவை தங்களின் தாயகத்திற்குத் திரும்புவதே முறையானது’ என்று சர்வதேசப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டிருந்தார். பிரதமர் மோடியும் தனது சமூக வலைதளப் பக்கத்தில், ‘இது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமகிழ்ச்சியான தருணம்; உலகின் மிக அழகான மொழிகளில் ஒன்றான தமிழில் எழுதப்பட்ட இந்தச் செப்பேடுகள் சோழர்களின் கடல்சார் ஆற்றலின் சாட்சி’ என்று பதிவிட்டுள்ளார்.



## ‘துருக்கன் அகமதன்’ உணர்த்தும் மத நல்லிணக்கம்

இந்தச் செப்பேட்டின் ஒவ்வொரு ஏடும் பேசும் அரசியல் இன்றைய நவீன உலகிற்குப் பாடம் புகட்டக்கூடியது. தமிழகத்தின் வரலாற்று ஆய்வில் புகழ்பெற்ற நூலான ‘கல்வெட்டு ஓர் அறிமுகம்’ என்ற நூலின் ஆறாவது பக்கத்திலேயே, இந்தச் செப்பேடு லேடன் (லைடன்) நகர அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள வரலாற்று விவரம் மிகத் தெளிவாகப் பதியப்பட்டுள்ளது.

மேலும் கல்வெட்டியல், வரலாற்று அறிஞரான புலவர் செ. இராசு அவர்கள் தொகுத்த ‘தமிழக இசுலாமிய வரலாற்று ஆவணங்கள்’ என்ற ஆய்வு நூலின் 70ஆவது பக்கத்தில் (செய்தி எண் 36), இந்தச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியின் இறுதி வரிகள் துல்லியமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

‘..க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துப் பிரமதேயம் சன்னமங்கலத்துச்

சபையோம் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கர ணத்தான் மத்யஸ்தன் துருக்கன் அகமுதனேன்.'

மேற்கண்ட வரிகள் லைடன் செப்புப் பட்டைய ஆவணப் பிரதியின்படி, அதன் மூல எழுத்து வடிவம் 'துருக்கன் கமுதன்'(துருக்கன் அகமது) என்று பதிவாகியுள்ளது. அந்தப் பகுதி வரும் ஏடு, வரிகள்

1. நேரடிச் சான்று (மூல உரையில் உள்ள வாறு) ஏடு-12 பக்கம்

234ஆவது வரி து பிரமதேயம் சந்நமங் கலத்து சபையோம் சபயார் சொல்ல எழுதினேன்

235ஆவது வரி இவ்வூர்க் கரணத் தான் மத்யஸ்தன் துருக்கன் கமுத னேனிவை யென் னெழு

236ஆவது வரித்தென்றும் இப்படிப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோ

ஆவணத்தில் உள்ள 'துருக்கன் கமுதன்' என்ற வார்த்தையை வரலாற்றுப் பின்னணியோடு நாம் இவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்.

**துருக்கன்:** அன்றைய சோழர் காலத்தில் அரபு, துருக்கிய அல்லது இஸ்லாமியப் பின்னணி கொண்டவர்களைக் குறிக்கப் பயன்பட்ட பொதுப் பெயர் (மறுபெயர்: சோனகன்).

**கமுதன்:** இது அகமுதன் / அகமது (Ahmed) என்ற இஸ்லாமியப் பெயரின் அன்றைய தமிழ்ப் படியெடுப்பு (Transliteration) மருவல் வடிவமாகும். (தமிழ் எழுத்து மரபில் 'அக முதன்' என்பது ஓலைச்சுவடிகளில் எழுதப் படும் போது 'கமுதன்' என்று மருவியுள்ளது).

**கரணத்தான் மத்யஸ்தன்:** இவர் சந்ந மங்கலம் என்ற பிரமதேயக் கிராமத்தின் 'கரணத்தான்' (கணக்கர்/ஆவண எழுத்தர் - Accountant) 'மத்யஸ்தன்' (ஊர் நடுவர் - Arbitrator) என்ற மிக முக்கிய அரசு நிர்வாகப் பதவியில் இருந்துள்ளார்.

ஆனைமங்கலம் கிராமத்தைப் பௌத்த விகாரத்திற்குத் தானமாக வழங்கும் போது, அந்த நிலத்தின் எல்லைகளைச் சுற்றி வந்து (பிடிசூழ்ந்து பிடாகை நடந்து) உறுதி செய்து, முறைப்படி 'அறவோலை' (தானப் பத்திரம்) எழுதிக் கொடுத்த சோழ நாட்டுப் பிரமுகர்கள், அரசு அதிகாரிகளின் சான்றொப்பப் பட்டியல் (Signatories) ஏடு 11 முதல் தொடங்குகிறது.

அந்த வரிசையில் சந்நமங்கலம் கிராமத்துச் சபையார் முன்னிலையில், அந்த ஊரின் கணக்கரும் நடுவருமான இந்த 'துருக்கன் கமுதன்' (துருக்கன் அகமது) சாட்சியாகத் தன் கையெழுத்தை இட்டு இந்த ஆவணத்தை உறுதி செய்துள்ளார். ஒரு பௌத்த விகாரைக்கு, ஓர் இந்து (சைவ) மன்னன் கொடுத்த கொடையை, அந்த ஊரின் அரசு அதிகாரியாக (கணக்கராக, ஊர் நடுவராக) இருந்து 'துருக்கன் அகமதன்' (அகமது) என்ற இஸ்லாமியர் எழுதித் தன் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளார்.

இதுகுறித்துத் தமிழகத்தின் மூத்த தொல்லியல், கல்வெட்டியல் அறிஞர் டாக்டர் வெ.வேதாசலம் குறிப்பிடும்போது, 'இந்த ஆனை மங்கலம் செப்பேடுகள் தமிழக வரலாற்றின் மிக முக்கியத் திருப்புமுனை ஆவணம். சோழர் காலத்தில் நிலவிய பன்னாட்டுத் தூதரக உறவையும், எல்லாவற்றிற்கும் மேலாக உள்நாட்டில் நிலவிய மிக உன்னதமான சமய நல்லிணக்கத்தையும் இது நிரூபிக்கிறது. இராஜ ராஜ சோழன் காலத்திலேயே இஸ்லாமியர்கள் அரசின் உயரிய, நம்பகமான பதவிகளில் இருந்துள்ளனர் என்பதற்கு 'துருக்கன் அகமதன்' என்ற பெயரே கல்வெட்டுச் சான்றாகும்' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று சில அரசியல் சக்திகள் கட்டமைக்க முயலும் குறுகிய வாதங்களை இந்த ஒற்றை வரி உடைத்தெறிகிறது. இஸ்லாமியர்கள் இந்த மண்ணிற்கு ஏதோ பிற்காலத்தில் வந்த அந்நியர்கள் அல்ல; சோழர் காலத்திலேயே, அவர்கள் இந்த மண்ணின் மைந்தர்களாக, நாட்டின் மிக முக்கிய இறையாண்மை ஆவணங்களை எழுதும் அளவிற்கு முதன்மைப் பொறுப்பில் பங்காற்றியிருக்கிறார்கள்.

மதங்களைக் கடந்து மனிதமும் நிர்வாகத் திறமையும் மட்டுமே இந்த மண்ணில் பிரதானமாக மதிக்கப்பட்டிருக்கிறது. பன்முகத் தன்மையும், சமய நல்லிணக்கமும் தமிழ்நாட்டின் ஆன்மாவிலேயே கலந்திருக்கிறது என்பதை இந்த ஆனைமங்கலம் செப்பேடு நிரூபித்துக் கொண்டே இருக்கும்.

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB Educational & Charitable Trust

AIM HIGH AIM FAR

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.

எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2 (f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

**PG COURSES**

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No : 5353A.1/2.20)

**LKG to XII Std**

**+1 COURSES OFFERED**

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with "B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

**OPENING SOON**

*All Muslim Parents are Requested to Support us in Admissions*

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

**63809 80363 / 04374-222123**

admissions@rdbcas.edu.in

# திருக்குர்ஆனைப் புறக்கணித்தல் என்றால் என்ன?

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

நாளை மறுமையில் நபி(ஸல்) அவர்கள் தமது சமூகத்தைப் பற்றி அல்லாஹ்விடம் முன்வைக்கவுள்ள மிகவும் கவலைக்குரிய ஒரு முறைப்பாட்டைத் திருக்குர்ஆன் பதிவு செய்கிறது:

'என் இறைவா! நிச்சயமாக என் சமூகத்தார் இந்தக் குர்ஆனைப் புறக்கணித்து விட்டார்கள்' என்று (நம்) தூதர் கூறுவார்' (திருக்குர்ஆன் 25:30)

இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் 'திருக்குர்ஆனைப் புறக்கணித்தல்' என்பது வெறுமனே குர்ஆனை ஓதாமல் இருப்பதை மட்டும் குறிக்கவில்லை. இதன் பரந்த பொருளை இமாம் இப்னுல் கைய்யிம்(ரஹ்) அவர்கள் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். அவர்களின் விளக்கத்தின்படி திருக்குர்ஆனைப் புறக்கணித்தல் பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகிறது:

1. **திருக்குர்ஆனை ஓதாமல் இருத்தல்; அது ஓதப்படும்போது கவனமாகச் செவிமடுக்காமல் இருத்தல்**

குர்ஆனுடன் தொடர்பை முறித்துக் கொண்டு அதை ஓதுவதையும் கேட்பதையும் அலட்சியப்படுத்துவது புறக்கணிப்பின் ஒரு வடிவமாகும்.

2. **அதன் வசனங்களைச் சிந்திக்காமல் அர்த்தங்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யாமல் இருத்தல்**

குர்ஆன் வெறும் ஓதலுக்காக மட்டுமல்ல; அது சிந்தனைக்கும் வழிகாட்டலுக்கும் அருளப்பட்டதாகும். அதன் கருத்துகளை அறியவும், புரிந்துகொள்ளவும் முயற்சி செய்யாமல் இருப்பதும் புறக்கணிப்பாகும்.

3. **அதன் போதனைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தாமல் இருத்தல்**

இது திருக்குர்ஆனைப் புறக்கணிக்கும் வடிவங்களில் மிகவும் தீவிரமானதாகும். ஒருவர் குர்ஆனை ஓதினாலும், அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், அது தடை செய்தவற்றைத் தவிர்க்காமல், அது வகுத்த ஹலால் ஹராம் வரம்புகளைப் பேணாமல் வாழ்ந்தால் அது பாரதூரமான புறக்கணிப்பாகும்.

4. **நடைமுறை வாழ்க்கையில் திருக்குர்ஆனின் சட்டத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தாமல் இருத்தல்**

வாழ்க்கையின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, பிற துறைகளில் திருக்குர்ஆனை வழிகாட்டியாக ஏற்காமல், அதன்

தீர்ப்புகள் போதுமானவை அல்ல என்று கருதுவதும் புறக்கணிப்பின் ஒரு வடிவமாகும்.

5. **நோய்களுக்குச் சிகிச்சையாக திருக்குர்ஆனைப் பயன்படுத்தாமல் இருத்தல்**


குறிப்பாக உள, ஆன்மிக நோய்களுக்கு குர்ஆனின் வழிகாட்டுதலையும், அதனூடாகச் செய்யப்படும் 'ருக்யா'வையும் புறக்கணித்து, வேறு இடங்களில் தீர்வுகளைத் தேடுவதும் இதில் அடங்கும்.

இந்த அனைத்தும், மறுமையில் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் முன்வைக்கவுள்ள 'திருக்குர்ஆனைப் புறக்கணித்தல்' என்ற முறைப்பாட்டின் பொருளுக்குள் அடங்குகின்றன என்று இமாம் இப்னுல் கைய்யிம்(ரஹ்) அவர்கள் விளக்குகின்றார்கள்.

## திருக்குர்ஆனைப் புறக்கணித்தவர்களாக மறுமையில் நிற்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

நாளை மறுமையில் திருக்குர்ஆனைப் புறக்கணித்த குற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமெனில், ஒவ்வொரு முஸ்லிமும் திருக்குர்ஆன் தொடர்பில் பின்வரும் நான்கு பெரும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்:

1. திருக்குர்ஆனை ஓத வேண்டும். தினசரி அதனுடன் தொடர்பைப் பேணி இதயம் குளிர, கண்குளிர கவனத்துடனும் ஓதி வர வேண்டும்.
2. அதன் போதனைகளை விளங்க வேண்டும். அதன் அர்த்தங்களையும், செய்திகள், கட்டளைகளையும் அறிய முயற்சி செய்ய வேண்டும்.
3. அதன் வழி வாழ வேண்டும். குர்ஆனின் போதனைகள் நமது சிந்தனை, சொல், செயல் ஆகிய அனைத்திலும் பிரதிபலிக்க வேண்டும்.



**திருக்குர்ஆனை வெறுமனே கையில் ஏந்துவதோ, வீட்டில் வைத்திருப்பதோ, இனிமையாக ஓதுவதோ மட்டும் போதுமானதல்ல. அதனை ஓதி, விளங்கி, அதன்படி வாழ்ந்து, அதன் பக்கம் மக்களை அழைப்பதே ஒரு முஸ்லிமின் முழுமையான பொறுப்பாகும்.**

4. அதன் பக்கம் மக்களை அழைக்க வேண்டும். குர்ஆனின் வழிகாட்டுதலையும் அதன் உயரிய போதனைகளையும் குடும்பத்தினருக்கும் சமூகத்தினருக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

திருக்குர்ஆனை வெறுமனே கையில் ஏந்துவதோ, வீட்டில் வைத்திருப்பதோ, இனிமையாக ஓதுவதோ மட்டும் போதுமானதல்ல. அதனை ஓதி, விளங்கி, அதன்படி வாழ்ந்து, அதன் பக்கம் மக்களை அழைப்பதே ஒரு முஸ்லிமின் முழுமையான பொறுப்பாகும்.

இந்த நான்கு பெரும் கடமைகளையும் நிறைவேற்றியவரே மறுமையில் திருக்குர்ஆனை ஏற்று, மதித்து, அதன் வழி வாழ்ந்தவராகக் கருதப்படுவார். அத்தகையோரே அல்லாஹ்வின் அருளையும் அன்பையும் பெற்ற பாக்கியசாலிகளாக இருப்பார்கள்.

# செல்வமும், செல்வாக்கும் தண்டனையிலிருந்து காப்பாற்றுமா?

ஒடுக்கப்பட்ட மக்கள் பெரியவர்களாய் காட்டிக் கொண்டிருந்தவர்களிடம் கூறுவார்கள்: 'இல்லை; இரவு பகலாக நீங்கள் செய்துகொண்டிருந்த வஞ்சனையாகும் இது! நாங்கள் அல்லாஹ்வை நிராகரிக்கும்படியும் மற்றவர்களை அவனுக்கு இணையாக்கும்படியும் நீங்கள் எங்களிடம் கூறியவண்ணம் இருந்தீர்கள்.'[53] இறுதியில் இவர்கள் வேதனையைக் காணும்போது உள்ளூர வருந்துவார்கள். மேலும், நாம் இந்நிராகரிப்பாளர்களின் பிடரிகளில் விலங்குகளைப் பூட்டுவோம். தாம் எவ்விதம் செயல்பட்டார்களோ அதற்கேற்பவே கூலி கிடைக்கும் என்பதைத் தவிர வேறு பிரதிபலன் ஏதேனும் மக்களுக்குக் கிடைக்குமா என்ன?

எச்சரிக்கை செய்யக்கூடிய ஒருவரை எந்த ஊருக்கு நாம் அனுப்பி வைத்தாலும் அவ்வூரில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவர்கள், 'நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற தூதுச் செய்தியை நாங்கள் ஏற்க மாட்டோம்' என்றே கூறினார்கள்.[54]

மேலும், அவர்கள் கூறினார்கள்: 'நாங்கள் (உங்களைவிட) அதிகமான செல்வமும் சந்ததிகளும் உடையவர்கள். நாங்கள் ஒருபோதும் தண்டனை பெறக் கூடியவர்கள் அல்லர்'.[55] (நபியே இவர்களிடம் நீர்) கூறும்: 'என் இறைவன் தான் நாடுகின்றவர்களுக்கு வாழ்வாதாரத்தைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், தான் நாடுகின்றவர்களுக்கு அளவோடு கொடுக்கின்றான். ஆயினும், மக்களில் பெரும்பாலோர் (இந்த உண்மையை) அறிவதில்லை.'[56]

● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 33-36

**53.** வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் அந்தப் பொது மக்களின் பதில், 'எந்த அடிப்படையில் இதற்கு எங்களையும் சரிசமமான பொறுப்பாளிகளாய் ஆக்கப் பார்க்கின்றீர்கள்? நீங்கள் உங்களின் சூழ்ச்சிகளைக் கொண்டும், மனதை மயக்குகின்ற பசப்பு வார்த்தைகளாலும், பொய்யான பரப்புரைகளாலும், விதவிதமான முழக்கங்கள், மோசடியான திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டும் எத்துணை பெரும் மாய வலையில் எங்களை இறுக்கிக் கட்டி வைத்திருந்தீர்கள்? இறைவனின் அடிமைகளை உங்களின் மாய வலையில் சிக்க வைப்பதற்காக அல்லும் பகலும் என்னென்ன தகிடுதத்தங்களை இடைவிடாமல் செய்துகொண்டிருந்தீர்கள்? எங்களுக்கு முன்னால் உலக ஆதாயங்களைக் காண்பித்ததால் நாங்கள் அதில் மயங்கி விழுந்துவிட்டோம் என்று ஒரே வரியில் முடித்துவிடக் கூடியதாக விவகாரம் இருக்கவில்லையே. உண்மையில் நீங்கள் எல்லோருமே அல்லும் பகலும் எங்களை முட்டாளாக்கிக் கொண்டே இருந்தீர்கள். உங்களில் ஒவ்வொரு வேட்டைக்காரனும் தினம் ஒரு வலையைப் பின்னிக் கொண்டு வந்து விதவிதமான உத்திகளைக் கையாண்டு அல்லாஹ்வின் அடிமைகளை அதில் சிக்க வைத்துக் கொண்டே இருந்தான் என்பது தானே உண்மை.

இந்தப் போலியான தலைவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றி வழிகெட்டுப் போனவர்களுக்கும் இடையிலான இந்தச் சண்டை குறித்து மகத்துவம் மிக்கக் குர்ஆனில் பல

*28 ஆம் பக்கம் பார்க்க...*

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# வீணான செலவைத் தவிர்ப்பீர்!

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ஒருவருக்கு (அவர் பாவியாவதற்கு) தன்னுடைய பொருளை வீணாக்குதலும் அல்லது எவருடைய வாழ்வாதாரம் தன்னுடைய பொறுப்பில் இருக்கின்றதோ அவற்றை அழித்து விடுதலுமே போதுமானதாகும்.’**

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி)
நூல் : அபூதாவூத்

ஒருவர் பாவியாவதற்கு அவர் தன்னுடைய பொருளை வீணாக்குவதும் தேவையற்ற, வீணான, பயனற்ற வேலைகளில் செலவிட்டு விரயம் செய்வதுமே போதுமானதாகும். தன்னுடைய பொறுப்பில் இருக்கின்றவர்களின் நலன்கள் குறித்து எவ்விதமான கவலையும் அவருக்கு இருக்காது. அதற்கு மாறாக அவர் தம்முடைய பணத்தையெல்லாம் வேறு எதிலோ செலவிடுவார். இவ்வாறாக அவர் தன்னுடைய பணத்தையெல்லாம் விரயம் செய்வார். அத்துடன் தன்னுடைய பராமரிப்பில் இருக்கின்ற மக்களையும் எதுவும் இல்லாதவர்களாக ஆக்கி அவர்களை நடுத்தெருவில் நிற்க வைத்துவிடுவார்.

எடுத்துக்காட்டாக பொருளாதார ஆதரவற்ற நிலையில் வாடுகின்ற வயதான பெற்றோருக்காகச் செலவிடாமல், தன்னுடைய பொறுப்பில் இருக்கின்ற குழந்தைகளின் பராமரிப்பை சட்டை செய்யாமல் பணத்தை வேறு எதிலோ தண்ணீராய் வாரி இறைக்கின்றார் எனில் அவர் மிகப்பெரும் பாவி என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

# இறைவனைச் சந்திக்கும் வேளையில்..

**நபி(ஸல்) அவர்களிடம் ‘இறைவனின் தூதரே! உணவுப்பொருட்கள், தானியங்கள் போன்றவற்றின் விலை அதிகரித்துள்ளது. எங்களுக்காக விலையை நிர்ணயம் செய்து விடுங்களேன்’ என மக்கள் முறையிட்டார்கள்.**

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘இறைவனே விலையை நிர்ணயிக்கின்றான். இறுக்கிப் பிடிப்பவனும் அவனே (வறுமையை ஏற்படுத்துபவனும் அவனே); செல்வச் செழிப்பை உண்டாக்குபவனும் அவனே. வாழ்வாதாரத்தைத் தருபவனும் அவனே.**

**என் மீது உங்களில் எவருக்கும் உயிர், உடைமை ஆகியவற்றைக் கோருகின்ற உரிமை இல்லாத நிலையில் நான் என்னுடைய அதிபதியைச் சந்திக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்; எதிர்பார்க்கின்றேன்’.**

அறிவிப்பாளர் : அனஸ்(ரலி)
நூல் : அபூதாவூத்

உயிர் தொடர்பானாலும் சரி, உடைமை தொடர்பானாலும் சரி எந்தவொரு உரிமை மீறலையும் என்னால் சகித்துக்கொள்ளவே முடியாது.

எவரேனும் எனக்கு எதிராகப் புகார் கூறியிருக்கின்ற நிலையிலும், என் மீது உரிமைப் பறிப்பின் சுமை சுமத்தப்பட்ட நிலையிலும் மறுமை நாளில் இறைவனைச் சந்திக்க எனக்கு விருப்பமில்லை.

**நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா**

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

வேறு இடங்களில் வெவ்வேறு விதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவரங்களுக்கு கீழ்க் கண்ட வசனங்களைப் பார்க்கவும்: 7:38,39; 14:21; 28:63; 33:66-68; 40:47-48; 41:29.

**54.** செல்வம், செல்வாக்கு, அதிகாரம் என எல்லாவற்றையும் பெற்றவர்கள்தாம் இறைத்தூதர்களின் தூதுச் செய்திக்கு எதிராகக் களம் இறங்குவதில் மற்ற அனைவரைக் காட்டிலும் முன்னணியில் நின்றுள்ளார்கள் என்கிற இந்த விவரம் மகத்துவம் மிக்க குர்ஆனில் ஏராளமான இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட வசனங்களைப் பார்க்கவும்: 6:123; 7:60,66,75,88,90; 11:27; 17:16; 23:24,33-38,46,47; 43:23.

**55.** ‘உங்களை விட எங்களைத்தான் அல்லாஹ் அதிகமாக நேசிக்கின்றான்; அல்லாஹ்வின் அன்புக்கும் விருப்பத்துக்கும் உரியவர்கள் நாங்கள்தாம். அதனால் தான் அல்லாஹ் உங்களிடம் இல்லாத, அல்லது குறைந்தபட்சம் உங்களிடம் அதிகமாக இல்லாத இந்த அருட்கொடைகளையெல்லாம் அவன் எங்களுக்குக் கொட்டிக் கொடுத்திருக்கின்றான். எங்கள் மீது அல்லாஹ்வுக்கு நேசம் இல்லையெனில் அவன் ஏன் எங்களுக்கு இந்த அருள் வளங்களையும் பெரும் செல்வங்களையும் சீர்களையும் சிறப்புகளையும் மாண்பையும் கொடுக்கப் போகின்றான்?

இந்த நிலையில் இந்த உலகத்தில் எங்கள் மீது இந்த அளவுக்கு அருள்வளங்களையும் செல்வத்தையும் சொகுசுகளையும் மழையாய்ப் பொழிந்துள்ள அல்லாஹ் மறுமையில் எங்களுக்குத் துன்புறுத்துகிற தண்டனையைத் தருவானா, என்ன? அப்படியே மறுமையில் எவருக்கேனும் துன்புறுத்துகிற தண்டனை தரப்பட்டாக வேண்டும் எனில் அது இந்த உலகத்தில் இவை எல்லாம் அருளப்படாமல் இருக்கின்ற மக்களுக்கு அல்லவா தரப்படும்!’ என்பது தான் அவர்களின் வாதமாக இருந்தது.

உலக மோகம் கொண்டு உலகத்துக்குப் பின்னால் அலைபவர்களின் இந்தத் தவறான கருத்து குறித்து மகத்துவம் மிக்க குர்ஆனில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டு அதற்குத் தக்க பதிலும் தரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பின்வரும் வசனங்களைப் பார்க்கவும்: 2:126,212; 9:55,69; 11:3,27; 13:26; 18:34-43; 19:73-77; 20:131; 23:55-61; 26:111; 28:76-83; 30:9; 74:11-26; 89:15-20.

**56.** உலகத்தில் அருள்வளங்கள் எந்த நலன் சார்ந்த விவேகத்தின் அடிப்படையிலும் ஞானத்தின் ஒளியிலும் பங்கிடப்பட்டிருக்கின்றன என்பது இந்த மக்களுக்குப் புரியவில்லை. இதனால் அல்லாஹ் எவருக்கு இந்த வளங்களைத் தாராளமாக அருளியிருக்கின்றானோ அவர் அல்லாஹ்வின் விருப்பத்துக்குரியவர்; அவன் எவருக்கு மிக மிகக் குறைவான அருள்வளங்களை அருளியிருக்கின்றானோ அவர் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாகியிருப்பவர் என்கிற தவறான கருத்துக்கு ஆளாகிவிடுகின்றார்கள்.

இத்தனைக்கும் கொஞ்சம் கண்களைத் திறந்து பார்த்தாலே சில சமயங்களில் மிக மிகக் கேடுகெட்ட, கேவலமான இழிவான நடத்தையைக் கொண்டவர் செல்வ வளங்களில் புரள்வதும், எத்தனையோ நல்லிதயமும் நல்லியல்பும் கொண்ட நல்லவர்கள் கண்ணியவான்களாய் மக்கள் மத்தியில் நல்லமுறையில் அறியப்பட்டவர்கள் வறுமையில் வாடிக் கொண்டிருப்பதும் அவருடைய பார்வையில் படும். இந்த நிலையில் இந்த மாதிரியான நற்குணங்களைக் கொண்ட மக்களை அல்லாஹ் விரும்புவதில்லை என்றும் கேடுகெட்ட, இழிவான நடத்தையைக் கொண்ட மக்களைத்தான் அல்லாஹ் விரும்புகின்றான் என்றும் எந்த அறிவார்ந்த மனிதர் தான் சொல்லத் துணிவார்?

(தொடரும்)

# கல்வியின் பொற்காலம்

– சவானா ஆலிமா நாஸிரிய்யா

ஆசிரியர், நாஸிரா மகளிர் ஷரீஅத் கல்வியகம்

பொற்காலம் என்பது ஒரு நாடு அல்லது ஒரு சமூகம் பல துறைகளில் மிக உயர்ந்த வளர்ச்சி, செழிப்பு, அமைதி, மகத்தான சாதனைகள் நிகழ்த்திய ஒரு காலகட்டத்தைக் குறிக்கும். அந்த வகையில் The Golden Age of Islam என்று அழைக்கப்படுகின்ற இஸ்லாமியப் பொற்காலம் கி.பி.8 ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை அப்பாஸியாக்கள் ஆண்டு வந்த காலத்தை குறிக்கிறது.

ஸ்பெயினிலே இஸ்லாமிய ஆட்சி கி.பி. 711 முதல் 1495 வரை 700 ஆண்டு காலம் நடந்த அறிவுப் புரட்சி என்பது உலக வரலாற்றில் எவரும் மறுக்க முடியாத காலகட்டமாகும். இஸ்லாம் உலகம் முழுவதும் பரவத் தொடங்கி அதிகமான மக்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள். வரிகள், ஜகாத் முறையாக வசூலிக்கப்பட்டு பொருளாதாரம் செழிப்பானதாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் நம்முடைய முன்னோர்கள் மக்களைக் கல்வியில் சிறந்தவர்களாக விளங்கச் செய்வதற்காக ஏராளமான பொருளாதாரத்தை வாரி இறைத்து அத்தனை துறைகளிலும் முஸ்லிம்களைக் காலூன்றச் செய்தார்கள்.

இன்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல முக்கியமான அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான அஸ்திவாரம் இஸ்லாமிய அறிஞர்களால் போடப்பட்டது. பக்தாதில் கி.பி.850 ஆண்டுகளில் பைத்துல் ஹிக்மா - House of wisdom கலீஃபா மஃமூன் அவர்களால் உருவாக்கப்பட்டது. இதன் மூலமாக முஸ்லிம்கள் பல்துறைகளைக் கற்ற(Polymathic Scholars) அறிஞர்களாக மாறினார்கள். அன்றைய பக்தாதின் அறிஞர்களோ நூலக அறிவு, ஆய்வறிவைப் பெற்று ஒரே அறிஞரே பல துறைகளில் தேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

வானியல் கோட்பாடுகள் என்றால் கோப்பர்நிக்கஸ், கெப்ளர், ஐன்ஸ்டீன் என்று கூறுவோம். ஆனால் கி.பி. 780-850 வரை வாழ்ந்த முஹம்மது இப்னு மூஸா அல் கவாரிஸ்மி என்ற வானியல் அறிஞர் கணிதவியல், வானியல், புவியியல் என அனைத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தார். கிதாபுல் ஜபர் என்ற இவருடைய புத்தகத்தின் மூல அரபி கையெழுத்துப் பிரதியொன்று இங்கிலாந்தின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள போட்லியன் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இன்றைக்கு கம்ப்யூட்டர் சயின்ஸ்க்கு மூலமாக உள்ள அல்காரிதத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர் கவாரிஸ்மி. எனவே இவர் கணித அறிவியலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இஸ்லாமியக் கல்வியைக் கற்ற பிறகு கணிதவியல், வானியல், புவியியல் போன்றவற்றின் மேதையாகத் திகழ்ந்தார்.

இப்படி சாதனையாளர்கள் உருவாவதற்கு மிக முக்கியமான காரணமாக திருக்குர்ஆன் விளங்கியது. மனிதர்களை சிந்திக்குமாறும் படைப்புகளை ஆய்வு செய்யுமாறும் தூண்டியது: ‘இவர்கள் குர்ஆனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அல்லது அவர்களின் இதயங்கள் மீது பூட்டுகள் போடப்பட்டிருக்கின்றனவா?’ (திருக்குர்ஆன் 47:24)

இதனாலேயே முஸ்லிம்களின் ஆரம்பக் கல்வி முதல் ஆய்வுக் கல்வி வரை மார்க்கக் கல்வியுடன் உலகியல் பாடங்கள் இணைக் கப்பட்ட ஆய்வுக் கூடங்களை உருவாக்கி னார்கள். விமானத்தைக் கண்டுபிடித்த அப்பாஸ் இப்னு ஃபிர்னாஸ், அறுவைச் சிகிச்சையைக் கண்டுபிடித்த ஸஹ்ராவி, புகழ்பெற்ற 'அல் கானூன் பித் திப்' என்ற மருத்துவத் துறையின் முக்கியமான நூலை எழுதிய இப்னு சீனா, ஒளியியலில் கிதாபுல் மானாசீர் என்ற பிரபலமான நூலையும் பல துறைகளில் சுமார் 200க்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதிய அறிஞர் இப்னு ஹைத்தம் என்று இஸ்லாமிய அறிஞர் களின் பட்டியல்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பொருளாதாரம் இல்லாமல் இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் சாத்தியமே இல்லை. இன்றைய உலகின் மிகப்பெரிய பணக்காரர்களான எலான் மாஸ்க், ஜெஃப் பேசோஸ், பில்கேட்ஸ் இவர்களை விடவெல் லாம் மிகப்பெரிய கோடீஸ்வரராக வாழ்ந்த ஒரு முஸ்லிம் மன்னர் மான்ஸா மூஸா (1280 -1337) ஆவார். ஆப்பிரிக்காவின் மாலி பாலை வனத்தை ஒட்டிய பகுதியில் அரசராக இருந் தார். அவருடைய செல்வத்தைப் பற்றி ஆப்பி ரிக்காவின் வரலாற்று ஆய்வாளர் மார்ட்டின் மெடிட் கூறும் பொழுது 'வரலாறு பதிவு செய்யப்பட்ட காலத்தில் முதன்மையான செல்வந்தர் மான்சா மூசா' என்று கூறுகிறார்.

தலைவர்கள், கலீபாக்களிடம் அவர் களிடம் உள்ள பொருளாதாரம் அல்லாஹ் விற்கு உரியது என்ற எண்ணத்தை இஸ்லாம் ஏற்படுத்தியிருந்தது. மான்ஸா மூசா ஆறா யிரம் மதரஸாக்களை நிறுவினார். ஜாமியா திம்புக்டூ என்ற பல்கலைக்கழகத்தை நிறுவி னார். அந்தப் பல்கலைக்கழகம் சிறந்த கட்டி டக் கலையைக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு உலகம் முழுவதிலும் இருந்து ஒரு இலட்சம் மாணவர்கள் அங்கு கல்வி கற்றார்கள். அந்தப் பல்கலைக்கழகத்தில் குர்ஆன், ஹதீஸ், கட்டிடக்கலை, கப்பல் கட்டுமானம், பொருளியல், வணிகவியல் பாடங்கள் நடத் தப்பட்டன.

ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு 100 ஆண்டுகள் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களாக இருந்தார்கள். அவர்கள் தொடாத துறைகளே கிடையாது. அவர்களே எல்லாவற்றையும் கற்றுத் தந்தார்கள். 651 ஆண்டுகள் முஸ்லிம் களுடைய ஆட்சி இந்தியாவில் நடந்தது.

'இந்தியா பொருளாதார வல்லரசாக 1750 ஆம் ஆண்டில் இருந்தது' என்று போலந்து நாட்டின் பொருளியல் ஆய்வாளர் பால் பேரூக் அவருடைய நூலில் குறிப்பிட்டார். இந்த ஆய்வை மீள் பரிசோதனை செய்யுமாறு உலக நாடுகளில் பலர் கோரிக்கை வைத்தனர். எனவே இதனுடைய உண்மைத் தன்மையை ஆன்கோஸ் மெடிசன் என்ற மிகப் பெரும் அறிஞர் ஆய்வு செய்து ஓர் ஆய்வறிக் கையைச் சமர்ப்பித்தார். அதில் '1750 இல் இந்திய துணைக்கண்டம் உலகப் பொருளா தாரத்தில் 26 விழுக்காடு பங்களிப்பு செய்து வல்லரசு நாடாக இருந்தது என்பது உண்மை' என்று குறிப்பிட்டார்.




அல் கவாரிஸ்மி


இப்னு ஃபிர்னாஸ்


இப்னு சீனா


இப்னு ஹைத்தம்

**ஆரம்பக் கல்வி முதல் ஆய்வுக் கல்வி வரை மார்க்கக் கல்வியுடன் உலகியல் பாடங்கள் இணைக்கப்பட்ட ஆய்வுக் கூடங்களை இஸ்லாமியர்கள் உருவாக்கினார்கள்.**

பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கஜேப் போன்ற முகலாய மன்னர்கள் ஆட்சி செய்த காலகட்டத்தில் தான் இந்தியா வல்லரசு நாடாக மாறியது.

இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும் பகுதியை ஆட்சி செய்தவர் கன்னியாகுமரி முதல் காபூல் வரை இந்தியாவின் நான்கு திசைகளையும் கட்டி ஆண்ட ஒற்றை மன்னர் என்று சொல்லப்படும் ஔரங்கஜேபின் ஆட்சி இந்தியாவின் பொற்காலமாகத் திகழ்ந்தது. ஒரு நூற்றாண்டு ஆட்சியின் பலனாகவே இந்தியாவின் பொற்காலத்தைக் காண முடிகிறது.

இன்றைய முஸ்லிம்களுடைய நிலை இதற்கு அப்படியே நேர் மாற்றமாக உள்ளது. 2006ஆம் ஆண்டு நீதிபதி ராஜேந்திர சச்சார் முஸ்லிம் சமுதாயத்தின் நிலையை ஆய்வு செய்து 410 பக்க அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் இந்திய முஸ்லிம்கள் கல்வி, சமூகம், அரசியல், பொருளாதாரம் பட்டியலின மக்களை விட மோசமாக உள்ளது என்று கூறினார். எந்தச் சமுதாயம் பொருளாதாரத்தின் முன்னோடியாக உலகத்தின் பொற்காலத்தை உருவாக்கியதோ அதே சமூகம் இன்று எல்லாவற்றிலும் பின்தங்கி நிற்கிறது.

'அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், பயணிகளுக்கும் சேரக் கூடியவை ஆகும். ஏனெனில் அது உங்களிலுள்ள செல்வந்தர்களிடையே மட்டும் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது என்பதற்காக!' (திருக்குர்ஆன் 59:7)

இதுதான் அல்லாஹ்வின் நீதமான பங்கீடாகும். ஆனால் இன்று உலகில் உள்ள 700 கோடி மக்களின் செல்வமும் ஒரு விழுக்காடு மட்டுமே உள்ள பணக்காரர்களிடம் இருக்கிறது. 2018 கணக்கெடுப்பின்படி 26 பணக்காரர்களிடம் உள்ள சொத்து மதிப்பு உலகத்தில் உள்ள 380 கோடி ஏழை மக்களின் சொத்து மதிப்பிற்குச் சமமானது என்று கூறப்படுகிறது.

ஆனால் உலகத்தில் தினமும் பத்தாயிரம் மக்கள் போதுமான மருத்துவ வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள் என்றும் 200 கோடிக்கும் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளார்கள் என்றும் 43 நாடுகளில் 45 மில்லியன் மக்கள் பஞ்சத்தில் தத்தளிக்கிறார்கள் என்றும் ஆய்வறிக்கைகளை நாம் காண முடிகிறது. இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால் முஸ்லிம் சமுதாயம் மீண்டும் அந்தப் பொற்காலத்திற்குத் திரும்ப வேண்டும்

'யார் மரணித்த ஒரு நிலத்திற்கு உயிரூட்டுவாரோ அது அவருக்குரியது' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸைக் கொண்டு ஔரங்கஜேபின் ஆட்சிக் காலத்தில் மக்களில் யார் சொந்தமாக நிலம் வைத்திருக்கிறார்களோ அவர்கள் அதில் விவசாயம் செய்ய வேண்டும். இல்லையென்றால் அதை அரசாங்கம் கைப்பற்றிவிடும் என்ற ஒரு சட்டத்தை இயற்றினார். இதன் மூலமாக மக்களை விவசாயம் செய்ய வைத்து அவர்களையும் அவர்களுடைய சமூகத்தையும் ஆரோக்கிய மிக்க உழைக்கக்கூடிய வர்க்கமாக மாற்றினார்.

இஸ்லாமிய வரலாற்றைத் தோண்டத் தோண்ட அளவில்லா சாதனைகள் புதையுண்டு கிடப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

# நபிமொழியின் முக்கியத்துவம்

**– மு.முஹம்மது பிர்தவ்ஸ்**

காலத்திற்கு ஏற்றவாறு அவ்வப்போது இறங்கிய வசனங்கள் மக்களிடம் நிலவும் ஐயங்கள், குறைகள், குற்றங்களைக் குறைத்தது. இறங்கக்கூடிய இறைவனின் வார்த்தைகளை அனைவராலும் விளங்கிட முடியாது. எனவேதான் நபி(ஸல்) அவர்கள் இறைமறையை மக்களிடம் விரிவாக எடுத்துரைத்து வந்தார்கள். நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் விளக்க உரைகள், சொற்கள், உபதேசம் போன்றவை நபித்தோழர்கள் வாயிலாக இன்று மட்டுமின்றி உலக இறுதிநாள் வரை வரக் கூடிய சமுதாய மக்களிடம் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

குர்ஆனை விளங்கவேண்டுமென்றால் அதற்கு ஹதீஸின் உதவியும் கண்டிப்பாக வேண்டும். நபித்தோழர்கள் குர்ஆனுக்கு முக்கியத்துவம் கொடுத்ததைப் போல் ஹதீஸிற்கும் முக்கியத்துவம் கொடுத்திருகின்றார்கள். குர்ஆன் ஹதீஸிற்கு மத்தன்(Source) என்றும் ஹதீஸ் குர்ஆனிற்கு விளக்கமாகவும் கருதப்படுகிறது.

## ஹதீஸ் என்றால் என்ன?

ஹதீஸ் என்பது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் செயல், சொல், தீர்ப்புகள், நடைமுறைகள், முன்னெடுத்துக்காட்டுகள் ஆகும். இறைவனால் அருளப்பட்டது திருக்குர்ஆன். நபி(ஸல்) அவர்களின் வாழ்வியல் ஹதீஸ்கள். குர்ஆனும், ஹதீஸும் அனைவரும் பின்பற்றத் தக்கதாகும். ஒரு ஹதீஸை ஒருவர் அல்லது பலர் சேர்ந்து அறிவித்திருக்கலாம். அந்த அறிவிப்பாளர்களின் பெயர்கள் சங்கிலித் தொடர்புடன் இறுதியாக நாயகம்(ஸல்) அவர்களிடம் நேரடியாகக் கேட்டு, பார்த்த விசயங்களாக அமையும்.

## ஹதீஸின் முக்கியத்துவம்

நபித்தோழர்கள் ஹதீஸ்களை மனனம் செய்ததுடன் எலும்பு, பட்டைகளில் எழுதியும் வந்தார்கள். 'யார் என்னுடைய சொல்லைக் கேட்டு, அதனை மனனம் செய்து பாதுகாத்து, பிறருக்கு எடுத்துச் சொல்கிறாரோ அந்த மனிதரின் வாழ்க்கையை அல்லாஹ் செழிப்பாக்குவானாக' என்று நபி(ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். (நூல் : திர்மிதி 3658)

நபி(ஸல்) அவர்கள் 'என்னிடமிருந்து ஒரு செய்தியைக் கேட்டாலும் அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுங்கள்' என்றார்கள். (நூல் : புகாரி 3227)

நபி(ஸல்) அவர்கள் இந்தளவிற்கு ஹதீஸின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார்கள்.

## ஹதீஸும் சட்டங்களும்

அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ள சட்டதிட்டங்கள் ஹதீஸைக் கொண்டே பரிபூரணம் அடைகிறது. 'மேலும் பகலின் இரு ஓரங்களிலும் இரவு சிறிது கழிந்த நேரத்திலும் தொழுகையை நிலைநாட்டுவீராக! திண்ணமாக, நன்மைகள் தீமைகளைக் களைந்து விடுகின்றன. அல்லாஹ்வை நினைவு கூர்கின்றவர்களுக்கு இது ஒரு நினைவூட்டி ஆகும்.' (திருக்குர்ஆன் 11:114)

இந்த வசனத்திற்கு விளக்கமாக நபி(ஸல்) அவர்கள் லுஹர், அஸர், மஃரிப், இஷா, பஜ்ர் தொழுகைகளைக் கூறினார்கள். திருக்குர்ஆன் 9ஆவது அத்தியாயம் 11ஆவது வசனத்தில் ஜகாத்தைக் கொடுங்கள் என்று இறைவன் கூறியுள்ளான். 60ஆவது வசனத்தில் யார் யார் ஜகாத் பெறத் தகுதியானவர் என்று கூறிவிட்டான். ஆனால் அவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை நபி(ஸல்) அவர்கள் ஹதீஸில் குறிப்பிடுகிறார்கள். இது போன்று அல்லாஹ் கூறக் கூடிய சட்டங்களுக்கு ஹதீஸ் எவ்வளவு முக்கியமாகச் செயல்படுகிறது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

## அல்லாஹ்வின் அனுமதி

‘யார் அல்லாஹ்வின் தூதருக்குக் கீழ்ப்படிகின்றாரோ அவர் உண்மையில் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிபவராவார். மேலும் யாரேனும் புறக்கணித்துவிட்டால், அவர்களின் பாதுகாவலராக உம்மை நாம் அனுப்பவில்லை.’ ( திருக்குர்ஆன் 4:80)

நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை இந்த வசனம் தெளிவு பட விளக்குகிறது.

‘இறைத்தூதர் எதை உங்களுக்குக் கொடுக்கிறாரோ அதைப் பெற்றுக் கொள்ளுங்கள். அவர் எதனைவிட்டும் உங்களைத் தடுக்கிறாரோ அதனை விட்டு விலகி இருங்கள். மேலும், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். திண்ணமாக, அல்லாஹ் கடும்தண்டனை அளிப்பவனாக இருக்கின்றான்’. (திருக்குர்ஆன் 59:07)

திருக்குர்ஆனின் வழிகாட்டுதலின் அடிப்படையில் நபி(ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். தொழுகை, நோன்பு போன்ற வழிபாடுகள் மட்டுமின்றி உண்பது, உறங்குவது, பேசுவது என்ற வாழ்வின் அனைத்து விஷயங்களுக்கும் வழிகாட்டிச் சென்றுள்ளார்கள். தோழர்கள் அதனைப் பின்பற்றினார்கள். அதையே நாமும் நடைமுறைப்படுத்தி நம் வாழ்வை இனிதாக்கிக் கொள்கின்றோம்.

உக்பத் இப்னு ஹாரிஸ்(ரலி) என்ற நபித்தோழர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களிடத்தில் ஒரு பெண் வந்து ‘நான் உங்கள் இருவருக்கும் பால்குடித் தாயாவேன்’ என்று கூற, உக்பத் இப்னு ஹாரிஸ்(ரலி) அவர்கள் நீங்கள்தான் பாலூட்டினீர்கள் என்று அறியவில்லை என்று கூறி, மக்காவிலிருந்து மதினாவிற்குச் சென்று நபி(ஸல்) அவர்களிடம் விளக்கம் கேட்டார். ஒரே தாயிடம் இருவரும் பால் குடித்தால் இருவரும் பால்குடிச் சகோதரர்களாகி விடுவார்கள். எனவே அந்தப் பெண்ணைப் பிரிந்து விட்டு வேறொரு பெண்ணை மணந்து கொண்டார். மார்க்கச் சட்டத்திற்காக இவ்வளவு தூரம் கடந்து செல்கிறார் என்றால் தோழர்கள் நபி(ஸல்) அவர்களின் மீதும் சட்டங்களின் மீதும் வைத்திருந்த முக்கியத்துவத்தை நாம் உணரலாம்.

நபித்தோழர்களுக்குப் பின்னால் வந்த இமாம்கள் அரபு நாட்டைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆனால் ஒரு ஹதீஸை ஆராய்வதற்காகப் பல மைல் தூரம் சென்று ஹதீஸின் உண்மை நிலை, அறிவிப்பாளரின் நேர்மை, உண்மை போன்றவற்றை புகாரி, முஸ்லிம், திர்மிதி போன்ற இமாம்கள் ஆராய்ந்து தெளிந்து தொகுத்துள்ளார்கள். அவர்களின் வாழ்க்கை முழுவதுமாக நபி(ஸல்) அவர்களின் ஹதீஸ்களை ஆராய்ந்து வழங்கியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தாலே போதும் ஹதீஸ்களின் முக்கியத்துவம் விளங்கிவிடும்.





***இன்றைய உலகம் இணைய வெளிகளின் கனவுலகமாக இருக்கிறது. உலகின் ஒவ்வொரு அசைவுகளையும் இன்றைய டிஜிட்டல் உலகம் தீர்மானிக்கிறது. இன்றைய இணைய வெளிகள் 5Gஇல் பயணித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. 2000க்குப் பிறகான 25 ஆண்டுகள் உலகின் தொடர்பு களில்(Communication) மிகப்பெரிய மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது.***

டிஜிட்டல் உலகம் நம்மை எல்லையற்ற தகவல்களோடு இணைத்து வாழ்க்கையை எளிதாக்கியுள்ளது. அதே நேரம் இது ஆரோக்கியம், பாதுகாப்பு, சமூக உறவுகளில் சில தீவிர சவால்களையும் ஏற்படுத்தி உள்ளது. இணையத்தின் சரியான பயன்பாடு இன்றைய வேகமான காலகட்டத்தில் மிகவும் அவசியமான ஒன்றாகும். டிஜிட்டல் தொழில்நுட்பம் ஏராளமான நன்மைகளை வாரி வழங்குகிறது. பொதுவாக புதிய தொழில்நுட்பம் வளர்ச்சி நிலைகளில் சில தீமைகள் ஏற்படுவதும் இயற்கையானது. எந்த தொழில்நுட்பத்தையும் நன்மைக்காகப் பயன்படுத்தும் போது அது உலகிற்கு நன்மை பயக்கிறது.

டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பயனால் தொலைதொடர்பு எளிதாகி உள்ளது. உலகின் எந்த மூலையில் உள்ளவர்களோடும் ஒரு நொடியில் தொடர்பு கொண்டு நேரடி உரை யாடல் போல காணொளியில் பேச முடிகிறது. இணையம் மூலம் எந்தத் தகவலையும் நொடியில் பெறமுடிகிறது. புதிய விசயங்களை எளிதாகக் கற்றுக் கொள்ள இது பெரிதும் உதவுகிறது. டிஜிட்டல் பரிவர்த்தனைகள், ஆன்லைன் வியாபாரங்கள், தொழில் வளர்ச் சிக்கு இது உலகளாவிய சந்தையை ஏற்படுத்தி யுள்ளது.

மின்னஞ்சல்(E-mail) தகவல் பரிமாற்றம் இன்று தவிர்க்கமுடியாத ஆவணமாகவே மாறி இருக்கிறது. சமூக வலைதளங்களான(Social

# டிஜிட்டல் உலகம்

Media) வாட்ஸ்அப், ட்விட்டர், இன்ஸ்டா கிராம், யூ டியூப் மிகப்பெரிய தகவல் பரிமாற்றப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. அதிகப்படியான இணையப் பயன்பாடு சமூக வலைதள மோகம், மனச்சோர்வு, தூக்கமின்மை டிஜிட்டல் போதை(Digital Addiction) போன்றவற்றை ஏற்படுத்துகிறது. இணைய மோசடிகள், ஹேக்கிங், தனிநபர் தரவுகளைத் திருடுவது போன்ற சைபர் குற்றங்கள்(Cyber crimes) நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. காவல்துறையில் சைபர் கிரைம் பிரிவு ஒன்று தனி அதிகாரங்களுடன் இயங்கி வருகிறது.

சமூக வலைதளங்களில் அதிகநேரம் செலவிடுபவர்கள், நிஜ உலகத்தில் உள்ள உறவுகள் குடும்பத்தினரிடம் இருந்து அந்நியப்பட்டு போகின்றனர். தொடர்ந்து திரையைப் பார்ப்பதால் கண்கள் பாதிப்பதுடன், கழுத்து வலி, உடல் பருமன் போன்ற உடல் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

டிஜிட்டல் சாதனங்களின் பயன்பாட்டில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து திரையில்லாத நேரத்தை(Digital Detox) ஒதுக்குவதன் மூலமும் இதன் தீமைகளிலிருந்து விடுபடலாம். நவீன உலகில் தொழில்நுட்பம் எப்போதும் நம்மை இணைத்திருப்பதைப் போல உணர வைத்தாலும், உண்மையான மனிதத் தொடர்பின் ஆழத்தை அதனால் நிரப்ப முடியாது.

டிஜிட்டல் உலகத்தில் சமூகத்தின் சக்தி முன்பைவிட மிகவும் வலுவானது, முக்கியமானது. நாம் இந்த வலுவான தொடர்புகளின் மூலம் சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பது நமக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை அளிக்கிறது. ஆன்லைன் அமைப்புகள், சமூக ஊடகக் குழுக்கள், மெய்நிகர் நிகழ்வுகள் மூலம் பல தரப்பட்ட செய்திகளை உடனுக்குடன் பரி மாறிக் கொள்ளலாம்.

டிஜிட்டல் டெக்னாலஜிக்கு உட்படாத துறையே இப்போது இல்லை எனலாம். ஒவ்வொரு துறையிலும் கண்ணுக்குத் தெரியாத பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. புதிய தொழில்நுட்பம், புதிய தயாரிப்புகள், பொருட்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், டிஜிட்டல் பட்டதாரிகளுக்கான வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன.

குறிப்பாக வேலைவாய்ப்பு சந்தையில் செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், பிளாக் செயின், பெருந்தரவுகள்(Big Data), தரவுப் பகுப்பாய்வு(Data Analysis) போன்ற டிஜிட்டல் துறைகள் இன்றைய நிலையில் மிகப்பெரிய சந்தையாக உருவாகி, மிகப் பெரிய பொருளாதார நலன்களை அளிக்கின்றன. குறிப்பாக தரவுப் பகுப்பாய்வாளர், விளையாட்டு மேம்பாட்டு ஆலோசகர், தகவல் தொழில்நுட்ப ஆலோசகர், வெப் டிசைனர், அப்ளிகேசன் டிசைனர் என இணையவெளி சார்ந்த ஏராளமான பொருளாதார வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

மனிதர்களோடு சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்யும் திறன் படைத்த இயந்திரங்களின் திறனே செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence) என்று அழைக்கப்படுகிறது. முன் அனுபவங்களில் இருந்து கற்று அறிவதோடு, மனிதர்களைப் போலவே வேலைகளை கணினிகள் செய்து முடிக்கிறது. கட்டளையை(Command) புரிந்து கொண்டு உதவியாளராகச் செயல்படுவது முதல் வாகனங்களை தானியங்கியாகச் செயல்படுவது வரையான பற்பல பணிகளை கணினிகளே செய்வதுதான் செயற்கை நுண்ணறிவு(Artificial intelligence) ஆகும்.

ரோபோக்கள், தானியங்கி வாகனங்கள், ஸ்மார்ட் போன்கள், ட்ரோன்கள், வீடியோ

விளையாட்டுகள், ஆன்லைன் விளம்பர மேலாண்மை, ஸ்மார்ட் வீட்டுப் பயன்பாட்டுக் கருவிகள் போன்ற பலவற்றை செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இயந்திரக் கற்றல்(Machine Learning) தொழில் நிறுவனங்களின் செயல்பாட்டை முழுமையாக மாற்றி அமைக்கும் தொழில் நுட்பமாகும். செயற்கை நுண்ணறிவு ஆணைகள் மூலம் தரவுத்தளத்தில் உள்ள தரவுகள் மூலம் குறிப்பிட்ட வேலைகளை முடிப்பதற்கு நிரல்படுத்தப்பட்டு(Program) இருந்தாலும், அதையும் மீறி துல்லியமான முன் கணிப்புகளை வரையறுத்து, கணினிக்குக் கற்றுக்கொடுப்பதே இயந்திரக் கற்றல் ஆகும். இந்தத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் உருவத்தைக் கண்டுபிடித்தல் வாக்கிய மொழி பெயர்ப்புகள் சாத்தியமாகின்றன. முப்பரிமாண அச்சாக்கம்(3D Printing) முப்பரிமாண பொருட்கள் உற்பத்தி தொழில்நுட்பமாகும். எண்ம வடிவமைப்பின் மூலம் பொருட்களை முன்பே கணித்து, அதன்படி தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய முடியும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் வாயிலாக வலிமையான இயந்திர பாகங்களையும், கட்டமைப்பையும் உருவாக்க முடியும். எப்படி கணினியில் வடிவமைத்த ஆவணங்களை அச்சுப்பதித்து பெற முடியுமோ, அதுபோலவே ஒரு பொருளின் கூறுகளை மென்பொருளில்(Software) வரையறை செய்து, மூலப்பொருட்களை இட்டு முப்பரிமாண அச்சாக்கத்தின் மூலம் எளிமையாக உற்பத்தி செய்ய முடியும். சுகாதாரம், மருந்தியல், கட்டுமானம், சில்லறை வர்த்தகம், பாதுகாப்பு, விமானவியல், தானியங்கி வாகனங்கள் போன்ற பல தொழில்களில் சேர்க்கை உற்பத்தி(Additive Manufacturing) முறைக்கு சிறப்பான வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

வங்கி, காப்பீடு, சில்லறை வர்த்தகம், சுகாதாரம், மருந்தியல், விருந்தோம்பல் துறை(Event management) பத்திரப்பதிவுகள் (Documentation) போன்ற இன்றைய அனைத்து வேலைகளுக்கும் இணைய வெளிகள் ஏராளமான பங்களிப்புகளைச் செய்கின்றன. வருவாய்த்துறை, பத்திரப்பதிவு போன்ற துறைகளில் ஆவணப்பதிவுகள் நடைமுறைகளை மிக எளிதாக்கி இன்றைக்கு வீடுகளிலிருந்தே அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றவோ, பதிவிறக்கமோ செய்து கொள்ள முடிகிறது.

சிறிய குக்கிராமங்களில் கூட முளைத்திருக்கிற E சேவை மையங்கள் எளிய மக்களின் அலைச்சலைக் குறைத்து லஞ்சம் போன்ற சமூக நச்சுகளை இணையவெளிப் பயன்பாடுகள் குறைத்துள்ளன. ஸ்மார்ட் கடிகாரம் முதல் ஸ்மார்ட் தொலைக்காட்சி வரை இணையங்களின் இணைப்பால் பயனளிக்கின்றன. வாடிக்கையாளர்களின் அணுகுமுறை, பயன்பாடு, முன்னுரிமை உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் திரைமறைவில் இருந்து துல்லியமாகக் கண்காணித்து நமக்குத் தனியாக தரவுகளை டிஜிட்டல் தொழில்நுட்பம் அளிக்கிறது.

இன்றைய அதிநவீன மருத்துவத்துறையில் நானோ(Nano) டிஜிட்டல் தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய ரோபோக்கள் மூலம் அறுவை சிகிச்சை (Robotic Surgeries) மருத்துவ உலகில் மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

**இந்த வலுவான தொடர்புகளின் மூலம் சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பது நமக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை அளிக்கிறது.**

**இணையப் பயன்பாடுகள் பிரச்னை குறித்து ஒன்பது பெருநகரங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் 7 முதல் 10 மணி நேரம் இணையத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியவில்லை என்று பயனாளிகள் கூறுவதாக அறிவிக்கிறது. இதனால் பல வகையான மனநோய் பிரச்னைகள் ஏற்படுகிறது.**

மிகச் சிக்கலான அறுவை சிகிச்சைகளையும், நோயாளிகளுக்கு அதிக சிரமங்கள் இல்லாமல் மிக எளிதாகச் செய்ய முடிகிறது. X-Ray, பல வகையான ஸ்கேன் கருவிகள், எல்லாமே AI தொழில்நுட்ப உதவியுடன் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன. மாபெரும் தொழில்நுட்ப மாற்றங்கள் நகரங்களில் ஏற்பட்டு இருந்தாலும், அவை கிராமங்களைச் சிறிதளவே சென்றடைந்தன.

இந்தச் சூழலில் 2013ஆம் ஆண்டு நாட்டில் 238.71 மில்லியன் இணையதள இணைப்புகள் இருந்த நிலையில் 2018ஆம் ஆண்டில் 560 மில்லியனாக அதிகரித்தது. உலக அளவில் அதிக இணையதள இணைப்புகள் கொண்ட இரண்டாவது மிகப்பெரிய நாடாக இந்தியா உருவெடுத்தது. இந்தியாவின் நகர்புறங்கள் இதில் பெருமளவு பயனடைந்துள்ளன. நாட்டின் கல்வித்துறை சந்தை 2010ஆம் ஆண்டுகளில் 2.5 பில்லியன் டாலராக இருந்தது இன்று 5 மடங்கு அதிகரித்து 12.5 பில்லியன் டாலர்களாக மாறி இருப்பதில் டிஜிட்டல் உலகின் பங்கு மிக முக்கியமானது.

கல்வியில் பார்வைத்திறன், செவித்திறன் குறைபாடு உள்ளவர்களும் இந்த டிஜிட்டல் கற்றல் முறைகளால் பயன் பெறுகின்றனர். ஸ்மார்ட் போன்களின் பயன்பாடுகளால், கிராமப்புறங்களிலும் இணைய உலகின் அனைத்து நன்மைகளையும் விரல் நுனியில் பெற முடிகிறது. புதிதாக மின்னணுக் கருவிகள் பயன்பாட்டுப் பிரச்னை(Digital Disorders) உருவாகிக் கொண்டிருப்பது குறித்து உலக நாடுகள் கவலை தெரிவித்து வருகின்றன.

சீனா, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் இணைய அடிமை என்பதை பொதுப் பிரச்னையாக உணர்ந்துள்ளன. இணைய விளையாட்டு அடிமையாக மாறும் சூழல் உடல்நலத்திற்கு மிகக் கேடானது என்று உலக சுகாதார நிறுவனம் 2019இல் அறிவித்தது. இணைய பயன்பாட்டு போதையிலிருந்து மீட்க மறுவாழ்வு மையங்கள் வெளிநாடுகளில் செயல்படுகிறது.

இந்தியாவில் முதன் முறையாக பெங்களூரில் உள்ள நிம்ஹான்ஸ் மருத்துவமனையில், சட் கிளினிக்(Service for healthy use of technology) தொடங்கப்பட்டுள்ளது. இணையப் பயன்பாடுகள் பிரச்னை குறித்து ஒன்பது பெருநகரங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் 7 முதல் 10 மணி நேரம் இணையத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியவில்லை என்று பயனாளிகள் கூறுவதாக அறிவிக்கிறது. இதனால் பல வகையான மனநோய் பிரச்னைகள் ஏற்படுகிறது. காலை முதல் இரவு படுக்கை வரை நாளொன்றுக்கு 150 முறை அலைப்பேசியைப் பார்ப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்களில் செய்யப்படும் அதிநவீன பரப்புரைகள் தமிழ் நாட்டில் யாருமே எதிர்பார்க்காத மிகப் பெரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இன்றைய சூழலில் இணையம், நவீன ஊடகங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதில் நமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.




# IFTயின் ஹஜ் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட்(IFT) சார்பில் ஊடகவியலாளர்களுக்கான ஹஜ் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி 04.06.2026 வியாழக்கிழமை Seashell ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியை மௌலவி S. அப்ஸல் அஹமது ஸலாமி திருக்குர்ஆன் வசனங்களை ஓதி தொடங்கி வைத்தார். S.N. சிக்கந்தர் வரவேற்புரை ஆற்றினார்.

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட்(IFT) தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீஃபா மன்பயீ தலைமை உரையாற்றினார். ஆண்டுதோறும் இந்நிகழ்ச்சியை நடத்துவதன் நோக்கம், அதன் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பத்திரிகையாளர், எழுத்தாளர், அரசியல் விமர்சகர் T.V. சோமு வாழ்த்துரை வழங்கினார். அவர் தமது உரையில், இஸ்லாத்தில் மிகவும் வலியுறுத்தப்படும் ஏழை, எளிய மக்களுக்கு உதவும் பண்பும் சமூக அக்கறையும் தம்மை மிகவும் ஈர்த்ததாகக் குறிப்பிட்டார்.

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் (IFT) துணைத் தலைவரும், பன்னூல் ஆசிரியரும், குழந்தைகள் நல மருத்துவருமான டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மத், தமது பெருநாள் செய்தியில், ‘ஆவதும் ஊடகத்தாலே; அழிவதும் ஊடகத்தாலே’ என்ற கருத்தை முன்வைத்து உரையைத் தொடங்கினார். காரணமற்ற போர்கள், அநீதியான போர்கள், அப்பாவி மக்களின் உயிர்களைப் பலிகொள்ளும் போர்கள், ஆதிக்க வெறியால் நடத்தப்படும் போர்களால் ஏற்படும் பாதிப்புகள், விளைவுகள் குறித்து விளக்கினார். இத்தகைய அநீதிகளைத் தடுத்து நிறுத்துவதில் சமூகத்திற்கும் ஊடகங்களுக்கும் உள்ள பொறுப்புகளை விரிவாக எடுத்துரைத்தார்.

ஓய்வு பெற்ற IAS அதிகாரியும் திரைப்பட இயக்குநருமான ஞான ராஜசேகரன் தமது உரையில், ‘வட தமிழக முஸ்லிம்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, அன்றாட பழக்க வழக்கங்கள் குறித்து தனது நண்பர் இக்பால் மூலமாக அறிந்து கொண்டதாகவும்,

அவற்றைப் பல தருணங்களில் நேரில் கண்டு உணர்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். கேரளாவில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் அங்குள்ள பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களும் ஒருவரது மதத்தை மற்றவர்கள் நன்கு அறிந்திருப்பதையும், அதனால் அங்கு நல்லிணக்கச் சூழல் வலுவாக நிலைபெற்றிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.



மௌலவி ஹனீஃபா மன்பயீ

கேரள முஸ்லிம்களின் திருமண நிகழ்வுகளில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் கதீஜா(ரலி) அவர்களுக்கும் இடையேயான அன்பையும் வாழ்வியல் முன்மாதிரியையும் மையமாகக் கொண்டு பாடல்கள் பாடப்படுவதைத் தாம் கேட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் கேரளத் திரைப் படங்களில் இஸ்லாமியக் கருத்துகளும் முஸ்லிம் சமூக வாழ்க்கையையும் பிரதிபலிக்கும் வகையில் பல திரைப் படங்கள் வெளியாகின்றன. ஆனால், தமிழகத்தில் அது போன்ற முயற்சிகள் குறைவாக இருப்பதாகவும் அவர் குறிப் பிட்டார்.



ஞான ராஜசேகரன்

இந்த நல்லிணக்க உணர்வே எப்போதும் நிலைத்திருக்க வேண்டும். இந்தியா என்பது பன்முகத்தன்மை கொண்ட நாடு. இது யாரோ ஒருவருக்கு மட்டும் சொந்தமானது என்ற கருத்து முற்றிலும் தவறானது; அதனை நான் உறுதியாக எதிர்க்கிறேன்' என்றும் குறிப்பிட்டார்.



S.N. சிக்கந்தர்

மூத்த ஊடகவியலாளர் அய்யநாதன் தமது உரையில், தற்போதைய உலக அரசியல் சூழல், போர்களின் பின்னணிகள் குறித்து விரிவாகப் பேசினார். அமெரிக்காவின் ஆதிக்க மனப்பான்மை, உலகளாவிய அரசியல் தலையீடுகள், டாலரின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் முயற்சிகள், அதனுடன் தொடர்புடைய பல்வேறு வரலாற்றுச் சம்பவங்கள் குறித்து தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல்வேறு ஊடக நண்பர்கள் தங்களது கேள்விகள் கருத்துகள் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட்(IFT) மேலாளர் S. சாகுல் ஹமீது நன்றியுரை வழங்கினார்.



T.V. சோமு

நிகழ்ச்சியை ஊடகவியலாளரும் பன்னூல் ஆசிரியருமான அஜீஸ் லுத்புல்லாஹ் சிறப்பாக நெறிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் 70க்கும் மேற்பட்ட மூத்த ஊடகவியலாளர்கள், யூடியூபர்கள், திரைப்பட இயக்குநர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**– S. சாகுல் ஹமீது**



அய்யநாதன்

# ஆரோக்கியமான இளைஞர் சமுதாயத்தை நோக்கி..!

**- எம்.ஐ.எம். அன்வர் ஸலபி, மதனி**

மனித வாழ்க்கையில் இளமைப் பருவமே முக்கியமான காலகட்டமாகும். இப்பருவம் ஒரு கத்திமுனையைப் போன்றது. அதனை ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பயன்படுத்தலாம். இளமைப் பருவம் என்பது குழந்தைப் பருவத்திற்கும், முழு வளர்ச்சிப் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவமென அடையாளப்படுத்தப்படு கிறது. இது உடல் வலிமையும் வீரியமும் கொண்ட பருவமாகும். வாழ்வில் சுறு சுறுப்பும் இயக்கமும் செயல்திறனும் மிக்க பருவமாகும். வாழ்வில் தன் வாலிபத்தைப் பயன்படுத்திக் கொள்ளாதவன் வளமான வாழ்விற்கு உடையவனாவது சாத்திய மன்று. இதனாலேயே முதுமை வரும் முன்னர் இளமையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நபிமொழி ஒன்று கூறுகின்றது.

'உன்னிடம் ஐந்து விசயங்கள் வருவதற்கு முன் ஐந்து விசயங்களைப் பயன்படுத் திக்கொள்.

1. மரணம் வருமுன் வாழ்க்கையையும்
2. நோய் வருமுன் ஆரோக்கியத்தையும்
3. வேலைப்பளு வருமுன் ஓய்வு நேரத்தையும்
4. முதுமை வருமுன் இளமைப் பருவத்தையும்
5. வறுமை வருமுன் செல்வ நிலையையும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஸாயி)

முன்மாதிரியான இளைஞனுக்கு உதாரணமாக திருக்குர்ஆன் நபி யூசுஃப்(அலை) அவர்களைக் குறிப்பிடுகின்றது. அவர்களின் ஒழுக்கப் பண்புகளை, நிர்வாகத் திறன்களைப் பற்றி விவரிக்கின்றது. அடையாள புருஷர்களாகக் கொள்ளத்தக்க ஓர் இளைஞர் குழுவைக் குறித்து திருக்குர்ஆனில் கஹ்ஃப் அத்தியாயம் பேசுகிறது.

'அவர்களின் உண்மையான சரிதையை நாம் உமக்கு எடுத்துரைக்கிறோம். திண்ண மாக, அவர்கள் தம் இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருந்த இளைஞர்களாவர். நாம் அவர்களை நேர்வழியில் மேலும் மேலும் முன்னேறச் செய்தோம். அவர்கள்



எழுந்து, யார் வானங்களுக்கும், பூமிக்கும் அதிபதியாக இருக்கின்றானோ அவனே எங்களுக்கும் அதிபதியாவான். அவனை விடுத்து வேறெந்தக் கடவுளையும் நாங்கள் அழைக்கமாட்டோம். அவ்வாறு அழைத்தால் திண்ணமாக நாங்கள் முறையற்ற பேச்சை பேசியவர்களாவோம் என்று துணிந்து பிரகடனம் செய்தபோது அவர்களின் உள்ளங்களை நாம் திடப்படுத்தினோம். (திருக்குர்ஆன் 18:13,14)

ஒரு சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதன் இளைய தலைமுறையைச் சரியாகப் பயிற்றுவித்து முறையாக நெறிப்படுத்தி வழிப்படுத்துவதிலேயே உள்ளது. அத்தகையதொரு சமூகமே எழுச்சி பெற முடியும் என்பதற்கு வரலாறு சாட்சி பகர்கின்றது. நபி(ஸல்) அவர்களின் வரலாற்றை எடுத்து நோக்கினால் இஸ்லாத்தின் வெற்றிக்குத் துணை நின்றவர்களாக இளைஞர்களே காணப்பட்டனர். ‘சமூகப் பெரியார்கள் அனைவரும் என்னைக் கைவிட்டபோது இளைஞர்களே எனக்குப் பக்க பலமாக இருந்தனர்’ என்ற நபி(ஸல்) அவர்களின் கூற்று இதற்குச் சான்றாகும்.

இஸ்லாத்தின் தொடக்ககால வெற்றிகளுக்கு இளம் தோழர்கள் அடித்தளமாக இருந்ததைப் போல அதைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் முஹம்மத் அல் பாதிஹ், தாரிக் பின் ஸியாத், முஹம்மத் காஸிம் போன்ற இளைஞர்களே இஸ்லாத்தின் வெற்றிக்கான பெரும் கோட்டைகளாகத் திகழ்ந்தனர்.

இயற்கை வளம், எண்ணெய் வளம், கனிம வளம், நீர் வளம் எனப் பல்வேறு வளங்களை ஒரு நாடு, ஒரு சமூகம் பெற்றிருக்கின்றது. இந்த வளங்கள் அனைத்தையும் விட அது பெற்றிருக்கின்ற மனித வளம் (Human Resource) மகத்தானது. அந்த வகையில் ஒரு சமூகம் பெற்றிருக்கின்ற சிறந்த வளமாக இளைஞர் சமூகம் உள்ளது.

இஸ்லாமிய சமுதாயத்தைப் பொறுத்த வரையில் இன்றைய நிலையில் இளைஞர்களின் சக்தியை சரிவரப் பயன்படுத்தத் தவறியிருக்கின்றது. அவர்களின் வளத்தை ஆக்க சக்தியாக அதிகளவில் பயன்படுத்த முனையவில்லை. அதனால் அவர்கள் போதைப் பொருளுக்கும் (Drugs) புகைப் பழக்கத்திற்கும்(Smoking) நிரந்தர அடிமையாகி அழிவு சக்தியாக மாறி வருகின்றனர்.

இன்று குக்கிராமம் முதல் பெரும் நகரம் வரை உலகளாவிய ரீதியில் பேரலையாக ஆர்த்தெழுந்து வரும் இளைஞர்களின் முறைதவறிய, உணர்வு ரீதியிலான போராட்டங்கள், கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வுகள் இன்றைய இளைஞர்களைப் பண்படுத்தத் தவறியமையைப் பிரதிபலிக்கின்றன. இளைஞர்களைக் கணக்கில் கொள்ளாது விட்டதனால் ‘மாபியா கும்பல்கள்’ அவர்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றன.

அதிகமான இளைஞர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றிய தெளிவில்லை. அதனால் அவர்கள் மிக இலகுவாக ஆன்மிக வறுமைக்கு உட்பட்டு மோசமான நடத்தைக்கு ஆளாகி விடுகின்றனர். கணிசமான ஒரு தொகையினருக்கு தொழுகை, நோன்பு போன்ற கடமைகள் குறித்த மேலோட்டமான அறிவு மாத்திரமே இருக்கிறது. இஸ்லாத்தில் ஆழமான நம்பிக்கையும், அறிவும் உள்ளவர்கள் நம்மில் குறைந்து வருகின்றனர்.

நவ யுகம் என்ற பெயரில் நம் மீது தொடுக்கப்படுகின்ற அநாகரிகங்கள் நமது தனித்துவத்தைத் தகர்த்து எறியக்கூடியவை. இன்று தகவல் தொழில் நுட்பத்தின் (Information Technology) அபரிதமான வளர்ச்சி காரணமாக நாம் அதன் நன்மைகளை விட தீமைகளுக்கு ஆளாகின்ற ஒரு சூழலிலே வாழ்கின்றோம்.

நவீனம் ஏற்படுத்தித் தந்திருக்கும் ஆடம்பரச் சாதனங்களின் மூலமாகவே பல அனாச்சாரங்களும், அசிங்கங்களும் அரங்கேறி வருகின்றன. இன்றைய சமூகத்தின் மத்தியில் புரையோடிப்

போயுள்ள சினிமா மோகம் இளைஞர்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. சமூகத்தில் கோலோச்சியுள்ள அநீதி, அக்கிரமம், இலஞ்சம், ஊழல், சீதனம் போன்ற சமூக வன்கொடுமைகளுக்கு எதிராகப் போராட வேண்டிய இஸ்லாமிய இளைஞர்கள் அது குறித்த அக்கறையில்லாமல் இருக்கின்றார்கள்.

இளைஞர்களின் ஆளுமையை வளர்த்து அவர்களின் பண்புகளைப் பக்குவமடையச் செய்வதில் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆனால் இன்று பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை வழங்கப்படும் நவீன கல்வி முறை வெறும் தகவல்களை மாத்திரம் வழங்கி அவர்களை வேலைச் சந்தைக்கு (Job Market) தயார்படுத்துகிறது. உண்மையில் கல்வி ஓர் இளைஞனை நடைமுறை வாழ்க்கைக்குத் தயார்படுத்த வேண்டும். கல்வியின் நோக்கம் வேலை வாய்ப்பு மட்டுமல்ல; வேலைவாய்ப்பு என்பது ஓர் அம்சமாக இருக்கலாம். ஆனால் நவீன கல்விக் கொள்கை இளைஞர்களை வேலை வாய்ப்பு ஒன்றே என்ற இலக்கை நோக்கி பயணிக்க வைத்து விட்டது.

நமது நாட்டின் கல்வித் திட்டங்கள் அரசுப் பதவிகளுக்கும் தேர்வுகளுக்குமாகத் தயாரிக்கப்பட்டது. கல்வி நிலையங்களும் வெறுமனே பணிசெய்பவர்களை உற்பத்தி செய்யும் ஆலைகளாக இயங்கி வருகின்றன. கல்வி கற்கும் மாணவர்களிடம் ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் நாம் காணமுடிவதில்லை. இது இறைவனை மறந்த கல்வித் திட்டத்தில் வந்த வினையென்றால் அது மிகையாகாது.

முஸ்லிம் நாடுகள் சமூகங்கள் மீது தொடுக்கப்பட்ட அந்நியப் படையெடுப்புகளை முஸ்லிம் இளைஞர்களும் அறிஞர்களும் மிகத் துணிச்சலுடன் எதிர்கொண்டு முறியடித்தமையைக் கண்ட காலனித்துவவாதிகள் சிந்தனா ரீதியான யுத்தத்தை (Intellectual invasion) மேற்கொண்டு எதிர்பார்த்ததைவிட அதிகளவில் வெற்றி பெற்றுள்ளனர்.

**இளைஞர்களின் முறைதவறிய, உணர்வு ரீதியிலான போராட்டங்கள், கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வுகள் இன்றைய இளைஞர்களைப் பண்படுத்தத் தவறியமையைப் பிரதிபலிக்கின்றன. இளைஞர்களைக் கணக்கில் கொள்ளாது விட்டதனால் 'மாபியா கும்பல்கள்' அவர்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றன.**

இஸ்லாத்தின் எதிரிகள் குறிப்பிட்ட சில படித்த வர்க்கத்திற்கு புலமைப்பரிசில்களை வழங்கி தமது பல்கலைக்கழகங்களில் வைத்து மிக இலகுவாக மூளைச் சலவை செய்து அவர்களை அனுப்பி வைக்கின்றனர். படித்த சமூகத்தின் நிகழ்கால இஸ்லாமிய விரோத நிலையைக் கூர்ந்து அவதானித்தால் இதை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

எனவே இன்றைய சமூக சீர்திருத்தப் பணியிலும், பரப்புரைப் பணியிலும் இளைஞர் விவகாரம் முக்கியத்துவமும் முன்னுரிமையும் பெற வேண்டியது அவசியமாகும். அதிலும் இளைஞர்களின் தனிப்பட்ட பண்பாட்டு வாழ்வை ஒழுங்குபடுத்துவது பிரதான இடத்தைப் பெறல் வேண்டும். இன்றைய இளைஞர்களின் இருப்பை அச்சுறுத்தும் மிகப்பெரிய பிரச்னை ஒழுக்கச் சீர்கேடுகளே என்பதை அறியாதோர் இருக்க முடியாது. ஆயினும் நடைமுறையில் முஸ்லிம் சமுதாயத்தில் இளைஞர்களின் பிரச்னைகள் உரிய இடத்தைப் பெறாமை கவலைக்குரியதாகும்.

ஆலிம்கள், இஸ்லாமிய அமைப்புகள் தமது நிகழ்ச்சி நிரல்களில் இளைஞர் உருவாக்கத்திற்கு இடமளிப்பது காலத்தின் இன்றியமையாத தேவையாகும். பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை இந்தப் பணியை முன்னெடுப்பது வலியுறுத்தத்தக்கது.



# ஆயுள் திருடர்கள்

- டாக்டர் கலீல்

அந்தி நேரம் வருகிறேன் என்பார்
சந்தியிலே காத்திருந்தால்
வாராமலே அந்தி சாய்ந்து
இரவாகிப் போகும்
பாராமலே போய்விடும் நேரம்

அலைப்பேசியில் கண்டதைக் கண்டு
காலம் கழிப்பார்
காலாவதியாகிப்போகும் காலம்

பார்ப்பார் தொலைக்காட்சியில்
படிப்பார் புத்தகத்தில்
பயனிலாப் பதர்களை
போக்குவது பொழுதன்று
போய்க்கொண்டிருப்பது
உலகில் அவர் இருக்கும் பொழுது

வேலை முடித்து
இல்லம் கிளம்பும் வழியில்
மறித்துக் கேட்பார் ஆலோசனை
இவர் திருடுவதோ
எம் மனைவி மக்கள் நேரம்

ஒரே பிரச்னைக்குப்
பல இடங்களில்
சந்தித்துக் கேட்பார்
ஆலோசனை
இவர் திருடுவதோ
பிறர்க்குப் பயனளிக்கும் நேரம்

வந்தமர்வார்
கவைக்குதவாத
கதை அளப்பார்
கரைந்து காணாமல்
போகும் நேரம்
அது நேரமல்ல
திரும்பப் பெறமுடியாத
ஆயுட்காலம்

# அக்கரைப் பச்சை

# 39

● ஜரினா ஜமால்

மறுநாள் அண்ணனிடம் இருந்து போன் வந்தது.

‘சாலிஹா! சித்திமா என்ன செய்தி பேசினாள் என்று தெரியவில்லை. அம்மா அழுதுகொண்டே இருக்கிறா. நீ போய் ஒருவாரம் ஆகவில்லை. அதற்குள் என்னவெல்லாம் நடந்து விட்டது’

‘ஒன்னுமில்லேண்ணே!’

‘உன் மாப்பிள்ளை வீட்டு ஆட்களிடம் ஒன்னும் பேச முடியாது. முன்ன மாதிரி ஒன்னுமில்ல ஒன்னுமில்லன்னு பூசி மெழுகாதே! நீ ஒன்னும் சின்னப் பிள்ளை இல்லை. இப்போதான் கொஞ்ச காலமா நிம்மதியா இருக்கே! உன்னை யார் கையிலாவது பிடித்துக் கொடுத்துவிட்டு சொத்துகளை ஆட்டயப் போட நெனக்கிறாங்க’

‘அண்ணே! என் மச்சி அப்படியெல்லாம் கிடையாதுண்ணே!’

‘எனக்கு எல்லாம் தெரியும். உன் விதி முடிந்துபோன கதை. அதை புதுப்பித்து எழுத நினைக்காதே! இனி உனக்கு இன்னொரு கல்யாணம் தேவையில்லை. ஊர் வந்து சேர்’

அய்யோ என்றாகிவிட்டது சாலிஹாவுக்கு.

இந்த சித்திமா தன் அக்காவுக்கு போன் போட்டு எதையோ சலம்பியிருக்கா. நான் என்ன கல்யாணம் கட்டிக்கொள்ள துடித்துக் கொண்டா இருந்தேன். ஆளாளுக்கு என் வாழ்வில் நுழைந்து, அவரவர்களுக்குத் தோன்றியதை எல்லாம் முடிவெடுக்கின்றார்கள். பேசுகிறார்கள். மழை நின்றும் துவானம் நிற்காத கதையாக உள்ளதே.

வீட்டில் சொந்தங்கள் எல்லோரும் இருந்ததால் முதல்நாள் அழுததைப் போல அழ முடியவில்லை. சாலிஹாவின் முக பாவனையைப் பார்த்து ஃபாத்திமா கேட்டாள்.

‘யார் மச்சி போனில்?’

‘அண்ணன்தான். எப்போ ஊர் வரேன்னு கேட்டாங்க’

தன் உடன்பிறப்பாயிற்றே. விட்டுக் கொடுக்க முடியாதே! தன் கணவரின் தங்கை எனக்கு மறுமணம் தேவை என்கிறாள். என் அண்ணன் உனக்கு மறுமணம் தேவையில்லை என்கிறான். என்ன முரண்பட்ட மனிதர்கள்.

எனக்கு வேண்டாம். என்னைப் போல் இருக்கும் பல பெண்கள் கொடுமைகளை அனுபவிக்கின்றார்களா? அவர்களுக்காக யாரும் பேசாததால் தான் மறுமணம் நடைபெறவில்லையா? இல்லை வீட்டிலுள்ளோர் தடை போடுவதால் மறுமணம் நடக்கவில்லையா? விதவைகளுக்கு மணமுடித்து வையுங்கள் என்று நபியவர்கள் சொன்னதும், அவர்களே மணமுடித்து செயல்படுத்தியதும், மற்றவர்களுக்கு முன்னுதாரணம் தானே?

பாரதிதாசன் விதவைகளைப் பற்றி எழுதிய வேதனை வரிகள் நினைவிற்கு வந்தது.

‘கேட்பாரற்று கிடக்குதண்ணே
வேரில் பழுத்த தீம்பலா!’

ஒரு ஆணோ, பெண்ணோ தவறான வழியில் போய் விடாமல் பாதுகாப்பது திருமணம். தங்கள் துணைகளை இழந்துவிட்டால் அப்படியே வாழ்வைத் தொடருங்கள் என்று இஸ்லாம் கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் இன்றைய

சமூகத்தில் மனைவி இறந்து இரண்டு மூன்று குழந்தைகள் இருந்தால் அந்த ஆணுக்கு ஐம்பது வயதைத் தாண்டினாலும் பிள்ளைகளை வளர்க்கன்னு சாக்கு போட்டு விரைவாக மறுமணம் செய்து வைக்க அவசரப்படுவார்கள். செய்தும் விடு வார்கள். மணமுடிக்கப் போகும் அந்தப் பெண்ணுக்குக் குழந்தைகள் இருக்கக் கூடாதென கண்டிசனும் போடுவார்கள். அவளுக்கு ஓரிரு சிறு பிள்ளைகள் இருந்தால் அவர்களை எங்கே விடுவாள்? இது போல பல்லாயிரக்கணக்கான கதைகள் சமூதாயத்தில் மறைக்கப்பட்டு கிடக்கிறது.

பழமொழி வேறு சொல்வார்கள். 'பொஞ்சாதி செத்தா புது மாப்பிள்ளை' அப்போ கணவர் இறந்தால் அவள் புதுப்பெண் என்று சொல்லக் கூடாதா? ஆனால் அதே கணவன் இறந்து அவள் கைம்பெண்ணானால் அவளுக்கு மணம் செய்து வைக்க யாரும் தூண்டுவதுமில்லை. திருமணம் முடிப்பதுமில்லை. பிள்ளைகள் இல்லாதிருந்தால் நலமென்பார்கள். மேலும் பிள்ளைகளிருந்தால் இனிமேல் என்ன இருக்கு. மக்களுக்காக ஆசைகளை அடக்கி வாழ வேண்டும் என்று அறிவுரை கூறுவார்கள்.

அவளும் இறந்துபோன கணவனை நினைத்து தலையணையில் கண்ணீர் வடித்துக் காலத்தைக் கழிக்க வேண்டியது தான். அவளிடம் மீதமுள்ள இளமையும் தேய்பிறையாய் கழிந்து விடும். பிள்ளைகளுக்காக தியாகியாகவும் ஆகிவிடுவாள்.

நீண்ட பெருமூச்சொன்று சாலிஹாவிடமிருந்து வெளிப்பட்டது. நிகழ் உலகிற்கு வந்தாள். நான் ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறேன். அவரவர் விதிப்படிதான் எல்லாம் நடக்கும்.

அண்ணன் பேச்சினால் எழும்பிய சீற்றம் இது. நல்ல வேளை மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். வாசலில் முத்துவின் சத்தம் கேட்டது. நொங்கு குலைகளைக் கொண்டு வந்திருந்தான்.

'முத்து ஆளையே காணோம்'

'அம்மா! கதுரருப்பு நேரம். வயக் காட்டையும் பாக்கனும், தோப்பையும் பாக்கணும். ஏனம் எடுத்தாங்கம்மா சீவி தந்துட்டுப்போறேன்'



சின்னவள் பேசனை தூக்கிக் கொண்டு ஓடினாள். திண்ணையில் உட்கார்ந்து சீவ ஆரம்பித்தான். வெள்ளை வெளேரென்ற நுங்குகள் பேசனை நிறைத்தது. அத்தனை நொங்குகளையும் ஒரு பிள்ளைக்கும் கொடுக்காமல் தூக்குசட்டி நிறைய கொண்டு போன பிரியா டீச்சரின் நினைவு வந்தது.

தெரு பிள்ளைகளெல்லாம் வேடிக்கை பார்த்தது. 'முத்து எல்லா பிள்ளைகள் கையிலும் ரெண்டு, ரெண்டு குடு'. நொங்குகளை

வாங்கிக் கொண்டு பிள்ளைகள் போனார்கள். எதிர்த்த வீட்டு பௌசியா பெத்தா வேக வேகமாக வந்தாள்.

'வாங்க பெரிம்மா' வீட்டிற்குள்ளே கூப்பிட்டு அமர்த்தினாள்.

'நொங்கு சாப்பிடுங்க பெரியம்மா!'

'சாப்பிடுறேமா! நொங்க தொலி யோடு சாப்பிடுமா. வயித்துப் புண்ண ஆத்தும். இவங்க எங்க அப்படி சாப்பிடு றாங்க'

பௌசியா பெத்தா வாசலைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நுங்கை வேகமாகத் தின்றாள்.

'பெரிம்மா! மெதுவா சாப்பிடுங்க. ஏ(ன்) பயந்து பயந்து சாப்பிடுறீங்க?'

**'எனக்கு எல்லாம் தெரியும். உன் விதி முடிந்துபோன கதை. அதை புதுப்பித்து எழுத நினைக்காதே! இனி உனக்கு இன்னொரு கல்யாணம் தேவையில்லை. ஊர் வந்து சேர்'**

'எம்மா! என் மருமவ பாத்தா ஏசு வாம்மா. எத்தனை காலம் ஆயிற்று நொங்க கண்ணால கண்டு. முன்னெல்லாம் தெருவுல வித்துட்டு வருவான். இப்ப ரோட்டுக்குப் போனாதான் இதெல்லாம் பார்க்கலாம்'

'ஏன் பெரிம்மா நொங்கு தின்னா ஏசணும்?'

'ஏதும் தின்னா சொகரு அதிகமாயிரு மாம். நான் கெடயில கெடந்துட்டா அவளால பாக்க முடியாதாம்' இருந்தார் போல் அழ ஆரம்பித்தாள் பௌசியா பெத்தா.

'எங் கதையை ஏன் கேக்குற? உம் மாமி உன்ன உள்ளங்கைல வச்சு கசக்கி வேலை வாங்குனா. இப்போ உள்ள வளுக்கு நாம வேல பாத்துக் குடுத்தாலும் நன்றி இல்ல!'

'அழாதீங்க பெரிம்மா'

'ளா! எம்மா, எம்மவே எம்பூட்டு சாக் குலட்டு கொடுத்து அனுப்புறான். குப்ப டப்பால எம்புட்டு சாக்குலட்டு தாளுவோ கெடக்கு. மோந்து பாத்தா என்ன வாசமா இருக்கு. வீடெல்லாம் ஈத்தம் பழக் கொட்டைகள் கெடக்கு. எனக்கு ஒன்னு தர மாட்டாளா. ஐசு பீரோவில் வச்சி பூட்டி, சாவிய எங்க வப்பாளோ தெரியல. அவ வாப்பா ஊட்டுல இதல்லாம் கண்ணால கண்டிருப்பாளா? எம் புள்ளய என்னானு வளத்தேன். இப்போ வந்தவா அர சாளுறா. எம் மாமிக்கும் நான் பயந்து கெடந்தேன்' சாலிஹாக்கு இதை யெல்லாம் கேட்டு வேதனையாக இருந்தது.

'சரி பெரிம்மா! அப்படியெல் லாம் சொல்லாதீங்க! நான் ஊருக்குப் போகும்போது உங்களுக்கு அதை யெல்லாம் வாங்கித் தந்துட்டு போறேன்'

பின்னாலிருந்து அவள் மச்சி குரல் கொடுத்தாள் .

'அவங்களுக்கு வயசு ஆயிட்டு. எதத் தின்னாலும் எதக் குடுத்தாலும் இல் லன்னு தான் சொல்லுவாங்க. தலையை ஆட்டிட்டு வாங்க. ஏதும் வாக்கு கொடுக் காதீங்க. அவங்களுக்கு ஏதும் ஆகிடக் கூடாதுன்னு அவ மருமவ கட்டுப்பாட் டோடு வச்சிருக்கா. நாம சொந்தமா இருந் தாலும் அதுக்குள்ள போய் நாம ஏன் மூக்கை நொழக்கனும்'

யார் பக்கம் பேச? முழித்தாள் சாலிஹா

(தொடரும்)

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

தொடர்பு கொள்வீர்
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# சமரசம் புதிர் போட்டி 12

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஜூன் 30 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘(நபியே,) கூறும்: நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான்! உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹி வருகிறது. எனவே, எவர் தன் இறைவனின் சந்திப்பை எதிர்பார்த்தவராய் இருக்கின்றாரோ அவர் நற்செயல்கள் புரியட்டும்; அடிபணிவதில் தன் இறைவனுடன் யாரையும் இணையாக்காதிருக்கட்டும்! ‘இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல் கஹ்ஃப் ஆ) அல் அன்பியா

2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ நான் கருப்பர்கள், வெள்ளையர்கள் என எல்லாத் தரப்பினருக்காகவும் அனுப்பப்பட்டிருக்கின்றேன்’ இந்த நபிமொழியின் அறிவிப்பாளர்

   அ) அபூ மூஸா அஷ்அரி(ரலி)
   ஆ) அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)

3. கணவன் மனைவிக்கு உவமையாக திருக்குர்ஆன் எதனைக் குறிப்பிடுகிறது?

   அ) ஆடை ஆ) வாகனம்

4. பூமியில் மலைகளை எவ்வாறு இறைவன் ஊன்றியிருக்கின்றான்?

   அ) முளைகளாக ஆ) வேர்களாக

5. சிங்கப்பூர் தமிழ் முரசு, ஆனந்த விகடன் போன்ற இதழ்களில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய, அண்மையில் இறைவனிடம் மீண்ட தமிழ் இஸ்லாமிய உலகின் மூத்த எழுத்தாளர்

   அ) தோப்பில் முஹம்மது மீரான்
   ஆ) ஜே.எம்.சாலி

5. கண் ஆபரேஷனை முதன்முதலில் வெற்றிகரமாகச் செய்து காண்பித்தவர்

   அ) அர்ராஸீ ரேஜஸ் ஆ) அல் குவாரிஸ்மி

7. தேனீக்களை அழித்துவிட்டால் நான்கு ஆண்டுகளில் மனித வாழ்வே சாத்தியமற்றதாகி விடும் என்று கூறியவர்

   அ) மார்க் வின்ஸ்டன்
   ஆ) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

8. தமிழ்நாடு சிறுபான்மை நலத்துறை அமைச்சர்

   அ) ஜே. முஹம்மது ஃபர்வாஸ்
   ஆ) ஏ.எம்.ஷாஜகான்

## புதிர் போட்டி பத்துக்கான விடைகள்

1.(ஆ) அல் பகரா 2.(ஆ)இப்னு அப்பாஸ்(ரலி) 3.(அ)கண்ணாடிக் குடுவை 4. (ஆ) 9 5. (ஆ)கே.ஆர். பெரியகருப்பன் 6. (அ) அகிலன் 7. (அ) தி வாய்ஸ் ஆஃப் ரஜப் ஹிந்த் 8. (ஆ) செய்ஸ்மோகிராப்

## சரியான விடையை எழுதியவர்கள்:

1. ஷே. மஹசூக், காரைக்கால் 2. முஹம்மது சலீம், புதுச்சேரி 3. ஜா. ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 4. K. ரிஹானா பர்வீன், பொதக்குடி 5. G. ரமேஷ், ஆக்கூர் 6. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 7. P.A. சமீஹா, கடையநல்லூர் 8. ந.அனிபா, நாமக்கல் 9. குர்சித் பர்ஹானா, திட்டச்சேரி 10. ஜுனைத் அஹமத், கூத்தாநல்லூர் 11. M. முஹம்மது முஸம்மில், கூத்தாநல்லூர் 12. P.P. யூசுப் ஹஸன், கடையநல்லூர் 13. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 14. முஹம்மது உவைஸ், ஏர்வாடி 15. ஏ.ஷாகுல், கொரக்காவாடி 16. அ.பல்கீஸ் பானு அஷ்ரப்தீன், பண்டார வாடை 17. பிர்தௌஸ், திருநெல்வேலி 18. முஹம்மது பெரோஸ்கான், நெல்லிக்குப்பம்

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

K. **ரிஹானா பர்வீன், பொதக்குடி**

# சமரசம்

## 47 ஆம் ஆண்டில்

அடியெடுத்து வைக்கிறது
இறைவனுக்கே புகழ் அனைத்தும்!










- *இதழியல் வரலாற்றில் ஒரு தலைமுறைப் பயணம்*
- *விருப்பு வெறுப்பற்ற பார்வை*
- *சொல்லுவதை நேரடியாகத் தெளிவாகச் சொல்லும் பாங்கு*
- *பிரச்னைகள் மட்டுமின்றி அதற்கான காரணங்களையும் அலசி தீர்வை முன்வைக்கும் பாணி*
- *பெரியவர்கள், சிறார்கள், பெண்கள், மாணவர்கள், சகோதரச் சமுதாயச் சொந்தங்கள் என எல்லாருக்குமான பாதை*
- *அரசியல், ஆன்மிகம், இலக்கியம், மருத்துவம், கல்வி, எல்லாமும் நிறைந்த பெட்டகம்*

எங்களுடன் இந்த நீண்ட பயணத்தில் இடையறாது இணைந்திருக்கும் வாசகப் பெருமக்கள், எழுத்தாளர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள், புரவலர்கள், சந்தாதாரர்கள் அனைவரையும் இந்த இனிய தருணத்தில் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறோம்.

**இணைந்திருப்போம்..! தொடர்ந்திருப்போம்..!** இன்ஷா அல்லாஹ்!

– **பொறுப்பாசிரியர்**

# உயிர் காக்க உதவிய ரியல் ஹீரோக்கள்

தலைநகர் டெல்லியின் மாளவியா நகரின் ஹவுஸ் ராணி பகுதியில் ஐந்து மாடி தங்கும் விடுதியில் 2026 ஜூன் 3 அன்று நடந்த தீ விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்தனர். தீயணைப்பு வீரர்கள் வரும் வரை காத்திருக்காமல் தீ விபத்து ஏற்பட்டதும் அங்கிருந்த பொதுமக்கள், தன்னார்வலர்கள் விரைந்து செயல்பட்டு மீட்புப் பணியில் ஈடுபட்டு பல உயிர்களைக் காப்பாற்றினர்.



மகன் அர்மானுடன் ரியாசுதீன் மன்சூரி

தீ விபத்து ஏற்பட்ட விடுதிக்கு எதிரில் மெத்தைக் கடை வைத்திருந்த 61 வயதான ரியாசுதீன் மன்சூரியும் அவரது மகன் அர்மானும் தீப்பிழம்புகள் விடுதிக் கட்டிடத்தைச் சூழ்ந்தவுடன் உடனடியாகத் தன் கடையிலிருந்த மெத்தைகளை விடுதியின் ஜன்னல் களுக்குக் கீழே விரித்தனர். இதைப் பயன்படுத்தி 14 நபர்கள் தப்பித்துள்ளனர். இதில் அவருக்கு சுமார் 2 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டு இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

அப்சல், முஹம்மது ஷாருக், முஹம்மது அனீஸ், முஹம்மது அமீர், முஹம்மது வசீம் ஆகியோர் டெல்லி காவல்துறையினருடன் இணைந்து எரிந்து கொண்டிருந்த கட்டிடத் திற்குள் சிக்கிய மக்களை தங்கள் உயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றினர்.



மீட்புப் பணியில் ஈடுபட்ட இளைஞர்களுடன் மாளவியா நகர் பாஜக MLA சதீஷ் உபாத்யாய்,



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் ரியாசுத்தீனை சந்தித்து ரூ. இலட்சம் ரூபாயை வழங்குகின்றனர்.

இந்த தியாகச் செயல் பொதுமக்கள் மத்தியில் பரவலான பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பெற்றுள்ளது. 'அவர்கள் தங்கள் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படா மல் பல உயிர்களைக் காப்பாற்றினார்கள்' என்று மாளவியா நகர் பாஜக MLA சதீஷ் உபாத்யாய் அந்த ஐந்து இளைஞர்களின் புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உயர்மட்டக் குழு தில்லி மாநிலத் தலைவர் சலீமுல்லாஹ் கான் தலைமையில் தீ விபத்து நடந்த இடத் திற்குச் சென்று பார்வையிட்டனர். ரியாசுத் தீனையும் உயர்மட்டக் குழுவினர் சந்தித்து அவருடைய அரும்பெரும் சேவையை ஊக்குவித்தும், இழப்பீடாகவும் ஒரு இலட்ச ரூபாயைக் கொடுத்தனர்.

– ரியாஸ்

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®

The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of

WCA INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 30 JUNE 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

தானும் குர்ஆனைக் கற்று,
பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே
உங்களில் சிறந்தவர்.

– முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**